

# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் கர்த்தர் செய்த அற்புதங்கள்

## 15 ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தை பாக்கியம்



திருமணமாகி 15 ஆண்டுகளாக எங்களுக்கு குழந்தை இல்லை. இதனால் சொல்லொண்ணா வேதனையுடன் நாட்களை கண்ணீருடன் கழித்து வந்தோம். மருத்துவ சிகிச்சை முறைகளை மேற்கொண்டும் எந்தவொரு பிரயோஜனமும் இல்லை. இந்நிலையில் ஈரோட்டில் உள்ள சகோதரர் ஒருவர் மூலம் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை குறித்து அறிந்து, எங்கள் பகுதிக்கு சகோதரர் வந்தபொழுது குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்துகொண்டு அவர்களிடம் குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்துக் கொண்டோம். சகோதரர் ஜெபித்து "கர்த்தர் உங்களுக்கு இரட்டத்தனையான ஆசீர்வாதத்தை அருளுவார்" என்று ஜெபித்து அனுப்பினார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு பல வருட கண்ணீரின் பாதையை எங்கள் வாழ்க்கையில் மாற்றிப்போட்டார். ஒருசில நாட்களில் கர்ப்பம் தரிக்கும்படியும், ஏற்ற சமயத்தில் இரண்டு குழந்தைகளை பெற்றெடுக்கும் படியும் கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. சந்திரன், பெருந்துறை

## படிப்பில் முதலிடம், அரசாங்க வேலை அருளிய அருள்நாதர்!



நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் பொழுது எனது படிப்பிற்காக Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்துக் கொண்டேன். தேவ கிருபையால் பத்தாம் வகுப்பில் நான் பள்ளியிலேயே முதல் மாணவனாக வந்தேன். அதன்பிறகு டிப்ளமோ படித்து தேர்ச்சியடைந்தேன். தற்போது மின்சார வாரியத்தில் Assistant Executive Engineer ஆக பணியாற்றி வருகின்றேன். ஐயா அவர்கள் ஜெபத்தினால் நான் வாழ்க்கையில் நல்ல ஒரு நிலைக்கு வரும்படி சர்வ வல்ல தேவன் இரக்கம் செய்துள்ளார். எனது பொருத்தனை காணிக்கைகளை அன்பரின் ஊழியத்திற்கு தருகின்றேன். தேவனுக்கே துதி, கனம், மகிமை! - திரு. ராஜ்குமார், ஈரோடு

## இரத்த புற்றுநோயை அற்புதமாக சுகமாக்கிய தேவன்!



எனது கணவர் இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். இதனிமித்தம் எங்கள் குடும்பமே துக்கத்தில் ஆழ்ந்தது. கண்ணீரில் நாட்களை கழித்தோம். மருத்துவர்கள் எனது கணவர் உயிருக்கு ஆபத்து, கடைசி கட்டத்திற்கு வந்துவிட்டார் இனி பிழைப்பது கடினம் என தெரிவித்தார்கள். இந்நிலையில் நாகர்கோவிலில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்துகொண்டு Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் கணவருக்காக ஜெபித்துக் கொண்டோம். அந்த நாளிலிருந்து எனது கணவருக்கு புற்றுநோயின் வேதனை குறைய ஆரம்பித்தது. மருத்துவம் செய்த மருத்துவர்களே ஆச்சரியப்படும் வண்ணமாக ஒருசில மாதங்களில் பரிபூரண சுகமடைந்தார். இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கின்றார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. கஸ்தூரி சந்திரன், நாகர்கோவில்

## அறுவை சிகிச்சையின்றி அற்புத சுகம்



எனது கணவருக்கு மூளையில் ஏற்பட்ட பிரச்சனையினால் ஐந்துமுறை அறுவை சிகிச்சை செய்துள்ளோம். எனினும், அவருக்கு அடிக்கடி காய்ச்சலும், தலையில் இரத்தகசிவும் ஏற்பட்டதால் மிகவும் கஷ்டப்பட்டார். மீண்டும் மருத்துவரிடம் அழைத்து சென்று சிகிச்சை மேற்கொண்டோம். பரிசோதனை செய்த மருத்துவர்கள் இன்னொரு அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என கூறினர். இதனால் நாங்கள் மிகவும் கலக்கமடைந்தோம். ஏற்கனவே ஐந்து முறை அறுவை சிகிச்சை செய்துள்ள நிலையில் மீண்டும் அறுவை சிகிச்சை செய்தால் அவரது உயிருக்கே ஆபத்தாகிவிடும் என மிகவும் பயந்தோம். இந்நிலையையில் மருத்துவமனையிலிருந்து வாட்ஸ்அப் மூலமாக அன்பரின் ஊழியத்திற்கு "எனது கணவருக்கு அறுவை சிகிச்சையின்றி சுகமாக வேண்டுமெனவும், அவருக்கு இரத்தகசிவு ஆகக்கூடாது" எனவும் ஜெப விண்ணப்பம் அனுப்பியிருந்தேன். எனது ஜெப விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு உங்கள் கணவருக்காக ஜெபிக்கின்றோம் என்று பதில் எழுதியிருந்தார்கள். கர்த்தர் அற்புதமாக செயலாற்றினார். இரத்தகசிவு முற்றிலும் நின்று போனது, காய்ச்சலும் சரியாகிவிட்டது. அறுவை சிகிச்சைக்கு முன் பரிசோதனை செய்த மருத்துவர்கள், இப்பொழுது நன்றாக இருக்கிறார், அறுவைசிகிச்சை செய்ய தேவையில்லை என்று கூறிவிட்டனர். நாளடைவில் பூரண சுகத்தை எனது கணவர் பெற்றார். ஜெபத்தை கேட்டு அற்புத சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. வினோதா பெலிக்ஸ், திருச்சி

## ஜீவ ஒளியினால் கண் பார்வையை அருளின தேவன்



சில மாதங்களாகவே எனது கண் பார்வை பாதிக்கப்பட்டு, வேதம் வாசிக்க முடியாமல், எதிரில் இருப்பவர்கள்கூட சரியாக தெரியாமல் இருந்தது. ஆறு மாதமாக தலைவலியினாலும் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். இந்நிலையில் குடும்ப ஆசீர்வாத கூட்டத்தில் கலந்துகொண்டேன். ஜெபவேளையில் எனக்கு முன்பாக மூன்று முறை ரோஸ் நிறத்தில் தேவ ஒளிவீசியதை நான் பார்த்தேன். அந்த நேரமே எனது கண் பார்வை குறைபாடு சரியாயின. இப்பொழுது வேதத்தை என்னால் வாசிக்க முடிகின்றது. தூரத்தில் இருப்பவைகளும் நன்கு தெரிகிறது. தீராத தலைவலி யிலிருந்தும் கர்த்தர் அற்புத சுகத்தை கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- Sis. ஏசுமணி, ஆலடி

## சர்க்கரை நோயிலிருந்து அற்புத சுகம்



நான் சர்க்கரை நோயினால் பல காலமாக கஷ்டப்படுகின்றேன். சமீபத்தில் எனது சர்க்கரை அளவை பரிசோதித்த பொழுது 600 ஆக இருந்தது. இதனால் எனது சரீரத்தில் பலபிரச்சனைகள் ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த முறை திருநெல்வேலியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெபவேளையில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் வியாதியுள்ள மக்களுக்காக ஜெபித்த பொழுது நானும் அவர்களோடு இணைந்து ஜெபித்தேன். ஜெபத்திற்கு பிறகு எனது சரீரத்தில் மாற்றம் ஏற்பட்டது. சர்க்கரை அளவு உயர்வினால் ஏற்பட்ட படபடப்பு சற்று குறைந்தது. மீண்டும் பரிசோதனை செய்த பொழுது சர்க்கரை அளவு 138 நார்மல் ஆக குறைந்திருந்தது. கர்த்தர் கொடுத்த சுகத்தை சாட்சியாக இந்த நாளில் சொல்வதில் அதிக மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- Sis. பவானி, பழையபேட்டை, திருநெல்வேலி

# அன்பரின் ஊழியம்

மலர் : 7 ◆ மார்ச் 2021 ◆ இதழ் 3



## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எனக்கருமையான அன்பரின் ஊழிய வாசகர்களே!

இந்த மாதம் முழுவதும் நம்மை கண்ணின் மணியை போல காத்த தேவனை துதிப்போம் ஸ்தோத்தரிப்போம்! பங்காளர்களாகிய உங்களில் பலரை கடந்த மாதத்தில் நடந்த தனி ஜெபங்களில் சந்திக்கும்படியான வாய்ப்பை தேவன் கொடுத்ததற்காக அவரை துதிக்கிறோம். தொடர்ந்து ஊழியத்தின் சார்பாக நடக்கும் எல்லா கூட்டங்களிலும், ஜெபங்களிலும் கலந்துகொள்ளுங்கள்.

இந்த மாதத்திலும் நடக்க இருக்கின்றதான எல்லா கூட்டங்களிலும் கர்த்தர் செயலாற்றி உங்கள் மத்தியில் அநேக அற்புதங்களை செய்வார். மத்தேயு 10:22ம் வசனம் சொல்வது போல அவருடைய நாமத்தின் நிமித்தம் நாம் உலகத்தினால் பகைக்கப்படுகின்ற காலங்கள் இது. அந்த பகை உணர்வு அநேக இயேசுவை அறிந்த மக்கள் மத்தியிலேயும் காணப்படுகின்றது. ஊழியம் செய்கின்ற போதகர்கள், ஊழியர்களுக்கு பல சமயங்களில் இது சோர்வை உண்டு பண்ணலாம். ஆனாலும் கலங்காமல் ஓடிக்கொண்டிருக்கிறோம். ஏனெனில், எங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர் அவர் எங்களிடத்தில் ஒப்புக்கொடுத்ததை உண்மையோடு செய்யும் பொழுது கடைசி நாளில் ஜீவ கிரீடத்தை அவர் எங்களுக்குக் கொடுப்பார். ஆதாயம் பண்ணப்படுகிற ஒவ்வொரு ஆத்துமாவும் எங்களுடைய பெயரில் எழுதப்படும் என்கின்ற சந்தோஷம் எங்களுக்குண்டு. எப்பாடு பட்டாலும் என்ன நேர்ந்தாலும் யாருடைய வசை சொற்களை கேட்டாலும், எப்படியாகிலும் ஒரு ஆத்துமாவாவது சந்திக்கப்பட வேண்டுமே, இரட்சிக்கப்பட வேண்டுமே என்கின்ற எங்களுடைய ஏக்கத்தையும், வாஞ்சையையும் கர்த்தர் அறிவார். அன்பு பங்காளர்களாகிய நீங்கள் அனைவரும் இந்த வாஞ்சை நிறைவேறுவதற்கு கொடுக்கின்ற உங்கள் உதவிகளுக்காகவும், ஜெபங்களுக்காகவும் நாங்கள் நன்றி செலுத்துகிறோம். தொடர்ந்து ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். ஊழியக்காரர்களாகிய எங்களையும் மறவாது நினைத்து ஜெபியுங்கள். ஊழியர்களுக்கு ஜெபிக்கின்ற நேரத்தை நீங்கள் அதிகரிக்கும்

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: (0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605 (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.mojworld.org & www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

பொழுது தேவன் உங்களுடைய வாழ்க்கையிலும் பெரிய அற்புதங்களை செய்வார். உங்களுடைய உதவிகள் ஒவ்வொன்றும் பரலோக கணக்கில் எழுதப்படும். ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண உதவும்.

மார்ச் மாதம் 20-ம் தேதி உங்களில் அநேகர் கேட்டுக் கொண்டபடி என்னுடைய மகன் மற்றும் டெலிவரன்ஸ் திருச்சபையின் பிள்ளைகள் ஆடின நடனங்கள் அனைத்தும் ஒரு ஆல்பமாக You tube - ல் (Ministry of Jesus) வெளியிடப்படுகின்றது. கண்டிப்பாக அதை பாருங்கள்.

மேலும் பங்காளர்களாகிய நீங்கள் வாட்ஸ்அப், டெலிகிராம் போன்ற செயலிகள் வைத்திருப்பீர்கள் என்றால் அந்த நம்பரை எங்களுடன் பகிர்ந்துகொள்ளவும். உங்கள் வீடுகளுக்கு வந்து நாங்கள் ஜெபிக்க வேண்டும் என்று நினைப்பீர்கள் என்றால் அதையும் எங்களிடத்தில் தெரிவிக்கலாம். படிக்கின்ற உங்கள் பிள்ளைகளுக்காக, பேரப் பிள்ளை களுக்காக நாங்கள் ஊக்கத்தோடு ஜெபிக்கிறோம். தேவன் அவர்களுக்கு அதிகமான ஞானத்தை கொடுத்து நன்கு படிக்க, அதிக மதிப்பெண்கள் பெற உதவி செய்வார். உங்கள் அனைவரையும் கர்த்தர் சுகத்தோடு பாதுகாத்துக் கொள்வார்.

இந்த மாதத்தில் பிறந்த நாள் காணும் எனது தந்தை மற்றும் எனது மகனுக்காக ஒவ்வொரு நாளும் உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள். விசேஷமாக என் தந்தைக்கு தேவன் நல்ல சுகத்தை தரும்படி யாகவும், தம்முடைய ஊழியத்தில் வல்லமையாக எடுத்து பயன்படுத்தவும், போகிற இடத்தில் எல்லாம் பாதுகாப்பை அளிக்கவும் ஜெபியுங்கள். பிறந்த நாளன்று எனது தந்தையை பார்த்து அவர்களை வாழ்த்த வேண்டும், பேச வேண்டும் என்று நினைக்கிறவர்கள் இந்த தொலைப்பேசி எண்ணில் (80987 42638) தொடர்பு கொள்ளுங்கள்.

நம்முடைய **SJ Saves Trust** ட்யூசன் மையங்களில் படிக்கும் பிள்ளைகள் அனைவரும் சுகமாக நன்றாக இருக்கிறார்கள். அதில் கிட்டத் தட்ட 90 சகவிகிதத்திற்கும் அதிகமான பிள்ளை களுக்கு நாம் கொடுக்கும் உணவு ஒன்றே அந்த நாளில் அவர்கள் சாப்பிடக்கூடிய நல்ல உணவாக இருக்கின்றது. பள்ளி இல்லாத படியால் அவர்களில் அநேகம் பேர் சத்துணவு உட்கொள்ள முடியவில்லை. எனவே தொடர்ந்து பிள்ளைகளுக்காக, அவர்களை கவனிக்க வேண்டிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

கடந்த பத்திரிக்கையில் உங்களில் அநேகர் பார்த்தபடி நம்முடைய அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தின் பராமரிப்பு பணிகள் செய்ய அதிகமான தேவைகள் இருக்கின்றது. அந்த தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள், உற்சாகமாய் தாங்குங்கள். நம்முடைய SJST மருத்துவமனைக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். நாம் இந்த மருத்துவமனையை வைத்து அநேக நற்காரியங்களை செய்ய நினைக்கிறோம். தேவன் அவற்றை தகுந்த நேரத்தில் நிறைவேற்ற தேவைகளை சந்திக்க ஜெபித்துக்கொள்ளுங்கள்.

நாம் கடந்த பல வருடங்களாக உங்களுடைய மிகுந்த உற்சாகத்தின் பெயரில் நம்முடைய பத்திரிக்கையில் மாதந்தோறும் வேத வினா போட்டிகளை நடத்தி வந்தோம். ஒவ்வொரு மாதமும் உங்களில் அநேகர் விசேஷமாக தாய்மார்கள் இந்த வேதவினா போட்டியில் பங்கு பெற்று பரிசுகளையும் பெற்று எங்களை உற்சாகப்படுத்தினீர்கள். இந்த மாதத்தி லிருந்து வேதவினா போட்டி மாதந்தோறும் வராது. சில மாதங்களுக்கு ஒருமுறை அதனை வெளியிடலாம் என இருக்கிறோம். அதற்குப் பதிலாக அநேக மிஷனரிகள், ஊழியர்கள் இவர்களுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங் களை உங்களுக்கு எழுதி உற்சாகப்படுத்த இருக்கிறோம். எனவே தொடர்ந்து இப்பத்திரிக் கையில் வெளிவரும் எல்லா பகுதிகளையும் படித்து பயன்பெறுங்கள், அநேகருக்கு அறிமுகப்படுத்துங்கள்.

நம்முடைய பத்திரிக்கை e-magazine வடிவில் வலைதளத்திலும் உண்டு. உங்கள் பிள்ளைகள் பேரப் பிள்ளைகளுக்கு சொல்லி அதை படித்து அறிந்துகொள்ள சொல்லுங்கள். தேவன் தாமே உங்கள் அனைவரோடுங்கூட இருந்து ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

**இம்மாத வாக்குத்தத்தம்**

**மத்தேயு 10:22**
**2 நாளாகமம் 20:12**
**எபேசியர் 5:8**
**ரோமர் 5:3,4**

# இதயம் தொட்ட எண்ணம்

**நம்முடைய உபத்திரவங்கள் நம் இயலாமைகளையும் தேவனால் இயல்பவைகளையும் நமக்கு நினைவுப்படுத்துகின்றது.**

**Our afflictions remind us of our impossibilities and God's possibilities.**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.



# நெருக்கத்திலிருந்து விடுவிக்கும் தேவன்

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

**கர்த்தர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார் - சங். 54:7**

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான தேவ பிள்ளைகளே!

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது இனிதான வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். இந்த வருட ஆரம்பத்திலிருந்து நம் எல்லோரையும் கண்மணி போல காத்த தேவனை துதிப்போமாக. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் தேவனை மகிமைப்படுத்தி அனுதினமும் ஸ்தோத்தரித்து அவருக்குள் சந்தோஷமாய் இருப்போமாக! விசேஷமாக இந்த வருடம் முழுவதும் நாம் எதிர்பாராத ஆபத்தான சம்பவங்கள் நடந்தாலும் உன்னதமான தேவனுடைய உயர் அடைக்கலத்தில் நீங்கள் இருக்கிறபடியால் ஒன்றும் உங்களை அணுகாது. உங்களை சூழ பலவிதமான இயற்கை சேதங்களையும், பூமி அதிர்ச்சிகளையும், வானத்தின் அடையாளங்களையும் 2021 ஜனவரி மாதம் 1ம் தேதி தேவன் என் மூலம் கூறினபடி நீங்கள் காண்பீர்கள். ஆனால் கர்த்தருடைய வேதம் கூறுகிறது,

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.

ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும்,

அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம் - சங்கீதம் 46 : 1-3

இந்த மாதமும் அன்பரின் ஊழிய வாசகர்களாகிய உங்களுக்கு என்ன செய்தியை எழுத வேண்டுமென்று ஜெபித்த பொழுது கர்த்தருடைய ஆவியானவர் எனக்குக் கொடுத்த வார்த்தை தான் மேலே நீங்கள் காண்பது. தாவீது ராஜா சந்தோஷமாய் கர்த்தரை புகழ்ந்து பாடி சொல்லும் வார்த்தைகள் தான் இவைகள். என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன் அவர் எனக்குச் செவிகொடுத்தார். என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும் நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர் எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும் - சங்கீதம் 120:1 மற்றும் சங்கீதம் 4:1ல் தாவீது இதே காரியத்தை சொல்கிறான். நெருக்கத்தில் இருந்த அவனை கர்த்தர் எல்லா நெருக்கங்களிலிருந்தும், உபத்திரவங்களில் இருந்தும் விடுவித்தார் என்று மிகுந்த மகிழ்ச்சியோடு கூறுகிறான். இன்றைக்கு நாம் வாழும் உலகில், நம்முடைய அன்பு சகோதர, சகோதரிகள், ஏன் நம்முடைய குடும்பத்தாரே பலவிதமான நெருக்கங்களை கடந்து போவதை பார்க்கிறோம். அதிலும் விசேஷமாக கோவிட் 19 போன்ற கொடிய தொற்று நோய் வந்த பிறகு அநேக குடும்பங்கள் வேலையின்றி, பண வசதியின்றி, வியாபாரமின்றி தவிப்பதையும், பலவிதமான கஷ்டங்கள் நம்மை ஆட்கொள்வதையும் நாம் காண்கிறோம். எனினும் தேவன் நமக்கு இன்று வாக்குக் கொடுக்கிறார். "நம்முடைய எல்லா நெருக்கங்களையும் நீக்கி நம்மை விடுப்பார்".

பரிசுத்த வேதாகமம் சொல்கிறபடி நாம் எப்படிப்பட்ட நெருக்கங்களில் நெருக்கப்படுகிறோம். அன்புள்ள இயேசு அவைகளினின்று நம்மை எப்படி விடுவிக்கிறார் என்பதை நாம் இச்செய்தியில் காணலாம்.

## பாவம் என்னும் நெருக்கம்

பாவ ஆசைகளின் நெருக்கம் (எபிரெயர் 12:1) தேவனுக்கு கீழ்ப்படியாத ஆதாம், ஏவாள் சந்ததியில் நாம் அனைவரும் பிறந்தபடியால் தலைமுறை தலைமுறையாக பலவித பாவ எண்ணங்கள், ஆசைகள், கொடுமைகள் நம்மை ஆண்டு கொள்கிறது. ஏன் 24 மணி நேரம் பரிசுத்த வேதாகமத்தில் மிகவும் பிரியமாய் இருந்த தாவீது "என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று; என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று" (சங்கீதம் 31:10) மற்றும் சங்கீதம் 38: 4 முதல் 8; 40:12; 25:7ல் இவ்வாறாக கதறுகிறான். என்னதான் மனிதன் தன்னை நீதிமான் என்று எண்ணினாலும் அவனுக்குள் இரகசியமாய் மறைந்திருக்கும் பெருமை, மேட்டிமை, மற்றவர்களை தரக்குறைவாக நினைத்தல், பரியாசம், துர்ச்சிந்தனைகள், கோபம், சண்டைகள், பிரிவினை ஆவிகள், பிறரை குற்றம் சாட்டும் ஆவி, வஞ்சனைகள், ஏமாற்றங்கள் காணப்படுவதை நாம் காண்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களின் நிமித்தம் ஜனங்கள் தங்கள் நிம்மதியை இழந்து விடுகிறார்கள். அதுமாத்திரமல்ல, சாத்தான் திரும்ப, திரும்ப வந்து மனிதனை இப்படிப்பட்ட காரியங்களில் மூழ்கடித்து வேதனைக்குள்ளாக மாற்றுகிறான். 1சாமுவேல் 28:15; 13:6; உபாகமம் 28: 53,57ன் படி தேவனாலும் தண்டிக்கப்படுகிறான். ஒருவேளை தேவனுக்கு பயப்படாத மக்கள் செய்யும் பெரும் பாவங்களை நாம் செய்யாவிட்டாலும் தங்களுக்குள் இருக்கும் பகைமை உணர்வுகளால் சோதனைகள் திரும்ப திரும்ப வந்து தேவ பிள்ளைகளை நெருக்குவதை நாம் காண்கிறோம். சோதனைகள் நம்மை துயரத்தில் ஆழ்த்துகிறது. திரும்ப திரும்ப சோதனை வரும் பொழுது அநேக விசுவாசிகளும் சோர்ந்து போகிறார்கள். பிசாசினுடைய கொடிய வலையில் விழுந்து விடுகிறார்கள். (1 பேதுரு 1:6) எனினும் அன்புள்ள தேவன் உங்களை கைவிடவே மாட்டார். அவர் நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்.

**மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்**

- 1 கொரிந்தியர் 10: 13

தேவ பக்தன் அருமையாக பாடுவதை போல,

சோதனை யடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகுவேளையில் என் சுகிர்தமே,
துக்கம் மிகுவேளையில, உன் தாசனுக்கு
ஆதாரம் நீ தான் ஐயா, என்துரையே,
ஆதாரம் நீ தான் ஐயா
சூதாம் உலகில்நான் தீதால் மயங்கையில் - ஆதாரம்

எவ்வளவு அழகான வரிகள் பாருங்கள். தாகம் நிறைந்த இந்த உலகத்தில் திரும்ப திரும்ப கடல் அலைகள் படகில் மோதுவது போல இப்படிப்பட்ட சோதனைகள் உங்கள் மீது வந்து மோதினாலும் உங்களோடுகூட எல்லா சோதனைகளையும் ஜெயித்த கர்த்தர் இருப்பார். அவர் உங்களுக்கு வெற்றியை தருவார். ஏனென்றால் அவர் எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டு பாவம் இல்லாமல் இருக்கிறார். மனிதன் தானே தன் சுய பலத்தால், நீதியின் நிமித்தமும், பெரிதான தியாகத்தாலும்,

சாத்தானின் கூர்மையான அம்புகளை தனித்து நின்று ஜெயிக்கவே முடியாது. ஆனால்,

"ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். - (எபி. 2: 18)

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்

- (எபி. 4 : 15)

எனவே சோதனை எல்லாம் ஜெயித்து வெற்றி சிறந்த இயேசு உங்கள் அருகில் இருப்பார். அப்பொழுது உங்களை முறியடிக்கும் படி உங்களை சூழ வருகிற சத்துருவாகிய சாத்தானின் பாவ சோதனை என்னும் அம்புகளை அவர் எரித்துவிடுவார். பாவ சோதனை மாத்திரமல்ல, பில்லிசூன்ய ஆவிகள், மந்திர கட்டுகள், செய்வினைகள், மற்றவர்களுடைய பொறமைகள், கண்திருஷ்டிகள், வஞ்சனைகளும் உங்களை அடிக்கடி வேதனைப்படுத்ததான் செய்கிறது. ஆனால் அவற்றை எல்லாம் ஜெயிக்க அபிஷேகத்தின் ஆவியை நிறைவாய் பெற்றுக்கொள்ளுங்கள். வேதம் கூறுகிறது, கர்த்தருடைய ஆவியானவர் எங்கே இருக்கிறாரோ அங்கே விடுதலை உண்டு (2 கொரி. 3:17) எனவே சோர்ந்து போகாதீர்கள்!

யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை - எண். 23: 23

சில காலத்திற்கு முன்பாக ஒரு தேவ பக்தி உள்ள அருமையான போதகர் ஒருவர் என்னை பார்க்க வந்திருந்தார். அவர்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான பிரச்சனைகளில் இருந்தார்கள். போதகர் என்னிடத்தில் தனித்து வந்து "ஐயா நான் அநேகருக்கு பிரசங்கம் செய்கிறேன். ஆனாலும் குறிப்பிட்ட ஒரு பாவத்தில் மறுபடியும் மறுபடியும் நான் விழுகிறேன். (பண விஷயத்திலும், பாகுபாடு பார்ப்பதிலும்) எனவே நான் ஆலயத்தில் என் சபை மக்களுக்கு பிரசங்கிக்கும் பொழுது சாத்தான் என் அருகிலிருந்து என்னைப் பார்த்து கொக்கரிப்பான். நீ மற்றவர்களுக்கு பிரசங்கம் செய்கிறாய், உன்னுடைய நிலைமை என்ன, ஏற்கனவே நீ இந்த பாவத்தில் விழுந்து இருக்கின்றாயே என்று கேலி செய்வான். இந்த வார்த்தைகளை கேட்கும் பொழுதெல்லாம் நான் தனித்துபோய் தேவ சமூகத்தில் அழுவேன். அந்த சோதனை வரும்பொழுது விழுந்துவிடுகிறேன்" என்று கதறினார். அப்பொழுது போதகரிடம் "நீங்கள் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய வேதத்தை எவ்வளவு நேரம் படிப்பீர்கள்" என்று கேட்டேன். அதற்கு அவர் "நான் வேதாகம கல்லூரியில் முதுநிலை படித்தவன். ஆகவே வேதம் எனக்கு நன்றாக தெரியும். பிரசங்கத்திற்கு முன்பு பத்து நிமிடம் மாத்திரம் வேதத்தை படிப்பேன். அதற்கு மேல் தேவை இல்லை" என்றார்.

அடுத்த கேள்வியாக "ஐயா, நீங்கள் பரிசுத்த ஆவியை குறித்து என்ன நினைக்கிறீர்கள்" என்றவுடன், அவர் சட்டென்று "இரட்சிக்கப்படும் பொழுதே அவர் வந்து விடுகிறாரே அதுபோதும். எனவே பரிசுத்த ஆவியை பெற்றேன் என்று சொல்கிறவர்கள், நவமான பாஷைகளை பேசுவது எல்லாம் உண்மையிலேயே மக்களை ஏமாற்றும் பொய் கூட்டம்" என்று சொன்னார். அவர் சொன்ன பதில் மிகவும் வேதனையாக இருந்தது. வேதாகம கல்லூரியில் முதுநிலை படித்தும் கூட இப்படி பரிசுத்த ஆவியை குறித்து தூஷணமாய் பேசுகிறாரே. வேதம் படிக்க வேண்டாம் என்கிறாரே என்று நான் ஆச்சரியப்பட்டேன். எனினும் அவர் மீது எனக்கு அன்பு பெருகியது. அவரிடம் "ஐயா முதலாவது ஒவ்வொரு நாளும் நீங்கள் வேதத்தை குறைந்தது 3 மணி நேரமாவது படியுங்கள், இரண்டாவது பரிசுத்த ஆவியை குறித்து

ஒருபோதும் கிண்டல் பண்ணாதிருங்கள். அவரை பற்றி தவறாக பேசாதிருங்கள். நீங்கள் அவரை பெற்றாலும், பெறாவிட்டாலும் அவரை பெற்றவர்களை பார்த்து கேலி செய்யாதீர்கள். உங்களை போல பிறரை நீங்கள் நேசித்தால் வேலைக்காக லஞ்சம் வாங்க மாட்டீர்கள். பிரிவினை பார்க்க மாட்டீர்கள்" என்று கூறியவுடன் அவர் ஆச்சரியப்பட்டார். நாங்கள் இருவரும் சேர்ந்து ஜெபித்தோம். இன்றைக்கு அவர் அபிஷேகத்தை பெற்று, நல்ல ஊழியம் செய்து ஓய்வும் பெற்றுவிட்டார்.

போதகரை தொடர்ந்து அவருடைய மனைவி வந்தார். அவர்கள் "ஐயா நான் பள்ளியில் படிக்கும்பொழுது எல்லாமே ஒன்று தான் என்று நான் நினைத்தேன். எனவே எங்களை எதிர்ப்பவர்களை கிறிஸ்துவை அறியாதவர்கள் செய்கிற மந்திர தந்திரங்களை உபயோகப்படுத்தி சத்துருக்களை முறியடிப்பேன். ஆனால் இப்பொழுது அந்த தீய சக்திகள் எல்லாம் என்னை ஒவ்வொரு நாளும் தாக்கி நடை பிணமாக்குகிறது, ஏழு முறை கர்ப்பம் தரித்தும் பாம்புகள் கனவில் வந்து எல்லாமே கலைத்துவிட்டது. எவ்வளவு பணம் வந்தாலும், குடும்பத்தில் சண்டைகள், குழப்பங்கள் வருகிறது" என்றார். உடன் தானே, நான் பரிசுத்த ஆவியால் நிறைந்து இயேசுவின் நாமத்தில் பிசாசுகளை விரட்டின பொழுது அவர்கள் சத்தமிட்டு அழுதார்கள். பிசாசு அவர்களை அலைக்கழித்தது. முடிவில் தேவ கிருபையால் விடுதலையானார்கள்.

ஆம் பிரியமானவர்களே! பாவ சோதனைகள், சாத்தானால் நாம் மரிக்கும் வரைக்கும் நம்மை விடாமல் துரத்துகிறது. எனினும் ஜெயம் கொடுக்கிற தேவன் நம்மோடு இருக்கிறார். அவர் உங்களுக்கு நிச்சயமாய் ஜெயம் கொடுத்து அந்த பாவ சோதனை என்கிற நெருக்கத்தை உங்களைவிட்டு நீக்குவார். விசாலமான பாதையில் உங்களை நடத்துவார்.

இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது; ஆனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி - சங்கீதம் 119: 143

கர்த்தாவே, பாரும், நான் நெருக்கப்படுகிறேன்: என் குடல் கொதிக்கிறது; நான் கடுந்துரோகம் பண்ணினபடியினால் என் இருதயம் வியாகுலப்படுகிறது; வெளியிலே பட்டயம் என்னைப் பிள்ளையற்றவளாக்கிற்று, வீட்டுக்குள்ளே மரணம் வந்திருக்கிறது - புலம்பல் 1: 20

என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர்

- யோனா 2: 2

நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்; எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர் - சங். 59: 16

நீதிமானோ நெருக்கத்தினின்று நீங்குவான் - நீதி. 12 : 13

## உலக வாழ்வில் வரும் நெருக்கங்கள்

பலவிதமான பணப் பிரச்சனைகள், காரணமில்லாத சத்துருக்களின் கொடுமைகள், வேலையின்மை, கடன் பிரச்சனை, குடும்ப உறவுகளில் ஏற்படும் முறிவுகள், கீழ்ப்படியாத பிள்ளைகளால் வரும் அவமானங்கள், குடும்பத்தில் வரும் பலவிதமான நெருக்கங்கள், ஓயாமல் சண்டை போடும் மக்கள், எவ்வளவு முயற்சித்தாலும், படித்தாலும் வாழ்வில் மேலே வர முடியாமை. இவை அனைத்தும் நம்மை வேதனைப்படுத்தி நெருக்குகிறது. பல சமயங்களில் இந்த நெருக்கத்தால் அன்பிற்கு

உதாரணமாய் கூறப்படுகிற பெற்ற தாயே தன் பிள்ளைகளை கொலை செய்து தன்னையும் கொலை செய்துகொள்வதை காண்கிறோம். மிகுந்த நெருக்கங்களால் பிள்ளைகளை நரபலிக்கு விற்றல், கூலி வேலைக்கு ஐந்து வயதிலேயே அனுப்புதல். பலவித பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்துதல் போன்ற காரியங்களும் நடக்கின்றது. வாழ்வில் முன்னேற வழியின்றி பண நெருக்கங்களால் படிக்காத மக்கள், ஏன் படித்தவர்கள் கூட திருடுதல், கொள்ளையடித்தல் போன்றவற்றை செய்கிறார்கள். சிலர் வாழ்வில் ஏற்படும் தொடர் நெருக்கங்களால் தற்கொலையும் செய்து கொள்கிறார்கள். அதோடுகூட தீராத வியாதிகள் நம்மை கலங்கடிப்பதையும், நம் உயிர் போகும் வரைக்கும் நம்மை வேதனைப்படுத்துவதையும், நெருக்குவதையும் பார்க்கிறோம். இந்த பயங்கரமான கோவிட் 19 வியாதி உலகத்தை தாக்கும்பொழுது எத்தனை பேருடைய மரணம் மிகக் கொடூரமாக முடிந்தது என்பதை நாம் அறிவோம். அதுமாத்திரமல்ல, ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை உள்ளவர்கள், பிற நம்பிக்கை உள்ளவர்களை இம்சிக்கும்பொழுது, கொடுமைப்படுத்தும் பொழுது, கொடூரமான சித்ரவதை செய்து கொலை செய்யும் பொழுது உள்ளங்கள் எவ்வளவாய் நொறுக்கப்படுகிறது. வர வர உலகம் தன் முடிவிற்கு வருகிற வேளையில் (கர்த்தருடைய இரண்டாம் வருகை நெருங்க நெருங்க) இப்படிப்பட்ட காரியங்கள் பெருகுவதை தான் பார்க்கிறோம். இது ஒருநாளும் குறைந்தபாடில்லை. எனினும் அன்பு மக்களே சத்திய வேதத்தில் உள்ள வாக்குத் தத்தங்களை நாம் நம்புவோம். தாவீதை அவனுடைய சகலவிதமான நெருக்கத்திலிருந்து விடுவித்த தேவன் உங்களையும் நிச்சயமாய் விடுவிப்பார். சிறுமைப்பட்ட உங்களுக்கு அவரே அடைக்கலமாய் இருப்பார். (சங்கீதம் 9:9; 18:6; 4:1; 129:1, 2, 4; ஏசாயா 25:4) உங்களுடைய கஷ்டங்களையும், நெருக்கங்களையும் அறிந்து கொண்டு உங்களை விடுவிக்கவே அன்புள்ள தேவன் கர்த்தராகிய இயேசுவை உலகிற்கு அனுப்பினார். இயேசுவின் உலக வாழ்வை குறித்து வேதம் இவ்விதமாய் கூறுகிறது.

அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்

- ஏசாயா 53 : 7

அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வ நாட்களிளெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்து வந்தார்

- ஏசாயா 63 : 9

ஆம் அவர் நமக்காக நொறுக்கப்பட்டார், நெருக்கப்பட்டார். தங்குவதற்கு கூட இடம் இல்லாமல் நம்முடைய தரித்திரத்தை தம் மேல் ஏற்றுக்கொண்டபடியால் நாம் கலங்கத் தேவையில்லை. நம்முடைய எல்லாவித சோர்வுகளையும், நெருக்கங்களையும், கஷ்டங்களையும், வேதனைகளையும் அவர் சிலுவையில் சுமந்துவிட்டார். அதை நாம் உண்மையாக நம்பும் பொழுது நிச்சயமாய் நமக்கு விடுதலை உண்டு. அவர் உங்களை ஒருபோதும் கைவிட மாட்டார். இன்றைக்கும் அவருடைய சிலுவையின் மரணமும், உயிர்த்தெழுதலுமே நம்மை எல்லாவித இக்கட்டுகளினின்றும் நம்மை விடுவிக்கும். இயேசுகிறிஸ்து என்னும் பெரிய நம்பிக்கை நமக்குண்டு. அந்த நம்பிக்கை நம்மை ஒருபோதும் ஏமாற்றாது. நீங்கள் ஒருவேளை நினைக்கலாம், நான் எவ்வளவாய் கஷ்டப் படுகிறேன். எனக்கு கடன் தொல்லையிலிருந்து

விடுதலை இல்லையே? குடும்ப பிரச்சனை, வேலையின்மை, குடும்ப பிரிவினை நீங்கி ஒற்றுமை வருமா அல்லது அநியாயமாய் கணவரால் தள்ளப்பட்ட எனக்கு மறுவாழ்வு உண்டா? அநியாமாய் என்னை குறை சொல்கிறவர்களுக்கு முன்பாக கர்த்தர் என்னை உயர்த்துவாரா? என்று நீங்கள் கேட்கலாம். அவர் நிச்சயம் உயர்த்துவார். இயேசுவை நம்புங்கள் அவரை மாத்திரம் பற்றி பிடியுங்கள்.

நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது - நீதி. 23 : 18

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் - சங்கீதம் 23 : 5,6

தேவனோ அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை எகிப்துதேசத்திற்கும் தன் வீடனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினான் - அப். 7 : 10

நிச்சயமாய் உங்களை வேதனைப் படுத்துகிற எல்லா காரியத்திலும் இருந்து உங்களை விடுவித்து யோசேப்பு, தானியேல், எஸ்தரைப் போல உங்களை உயர்த்துவார்.

## ஆவிக்குரிய வாழ்வில் ஏற்படும் நெருக்கங்கள்

லூக்கா 12:50; 2 கொரி 4:8; 2 கொரி. 5:16; பிலிப்பியர் 1:23

கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர் - ஏசாயா 25 : 4

கிறிஸ்து இயேசு உலகில் வாழ்ந்த பொழுது கஷ்டமான, வேதனை நிறைந்த ஒரு ஸ்நானத்தை முழ்க வேண்டியதாயிற்று. அது தான் ரோமர்கள் உபயோகப்படுத்தின மிக மிக கொடூரமான, பரியாசம் நிறைந்த, அணுவணுவாய் வேதனைப்படுத்தி குற்றவாளியை கடுமையான முறையில் கொலை செய்கிற சிலுவை மரணம். உன்னதமான தேவன் வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவராகிய தேவன் மகா பரிசுத்தர், வல்லமையுள்ளவர், அண்ட சராசரங்களை தம் வார்த்தையால் நடத்துகிறவர். அக்கிரமக்காரரால் சாத்தான் கண்டுபிடித்த இந்த குரூர சிலுவையின் வேதனையை அனுபவிக்க வேண்டுமா? இதை நினைத்த பொழுது இயேசுவின் உள்ளம் மிகவும் அங்கலாய்த்தது, வேதனைப்பட்டது. ஆனால் நமக்காக அவர் அதை தாங்கிக் கொண்டார். இதேபோல சீஷர்களும், அப்போஸ்தலன் பவுலும் எல்லாவிதத்திலும் நெருக்கப் பட்டார்கள், கலக்கமடைந்தார்கள், எதிர்ப்பு களை சம்பாதித்தனர், கல்லெறியுண்டார்கள். (2கொரி. 11:23-27). ஆனால் இவை எல்லா வற்றையும் விட கிறிஸ்துவின் அன்பு அப்போஸ்தலன் பவுலை நெருக்கி ஏவின படியால் (1 கொரி. 5:16) அவர் தம்முடைய சுவிசேஷப் பயணத்தை வெற்றிகரமாக முடித்து, சொல்ல வேண்டும் என்றால் பாதி ஐரோப்பாவை கர்த்தருக்குள் கொண்டு வந்தார். நூற்றுக்கணக்கான சபைகளை ஏற்படுத்தினார்.

ஆம் அன்பான தேவ ஜனமே! இப்பொழுது நம்மில் அநேகரிடம், "நீங்கள் மோட்சம் போக விரும்புகிறீர்களா?" என்று கேட்டால் நூற்றுக்கு தொண்ணூறு கிறிஸ்த

வர்கள் ஆம் என்று பவுல் அடிகளை போலதான் சொல்வார்கள் (பிலி.1: 23). ஆனால் கிறிஸ்து இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்பு இன்னும் கிறிஸ்துவை அறிவியாத இடங்களில் சுவிசேஷம் பரவ வேண்டும், அவரை பற்றி அவர் அன்பைப் பற்றி கூற வேண்டும். மனிதர்கள் எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற வாஞ்சை உங்களுக்குள் அதிகமாய் காணப்பட வேண்டும். உண்மையாக இயேசுவிடம் அன்பு கூறுவீர்கள் என்றால் அவருடைய சுவிசேஷ வாஞ்சை உங்களை விட்டு போகவே போகாது. அதனிமித்தமாக சாத்தானை எதிர்த்து மழையிலும், வெயிலிலும், அனுகூலமான இடங்களிலும், அனுகூலம் இல்லாத இடங்களிலும் அவரை பற்றி சொல்வதற்கு பவுலை போல துடிப்பீர்கள். கிறிஸ்துவில் உள்ள அன்பு உங்களுக்கு அதிகரிக்க அதிகரிக்க அவரை பற்றி கூறவும், ஜனங்களின் இரட்சிப்பிற்காக உபவாசம் இருந்து ஜெபிப்பதிலும், பிறரிடத்தில் அன்பு கூறுவதிலும் முன்னேறி நிற்பீர்கள். இந்த காலகட்டத்தில் கிறிஸ்தவ மக்களும், சபைகளும், உலகம் முழுவதும் பல நெருக்கங்களை அனுபவித்து வருகின்றன. எனினும் மனங்கலங்காதீர்கள்! கர்த்தருடைய வேலையை செய்கிற உங்கள் ஒவ்வொருவரையும் அவர் ஆசீர்வதிப்பாராக! நெருக்கத்தின் மத்தியிலும் உங்கள் சபைகளை பெருகச் செய்வார். உங்கள் ஊழியங்களை பலப்படுத்துவார். கிருபையின் வரங்களை உங்களுக்கு அருளி அநேகரை உங்களைக் கொண்டு இரட்சிப்பார். உங்களுக்கு பிற்பாடு உங்கள் குடும்பத்தையும், உங்கள் ஊழியங்களையும் நேசிக்கிறவர்களை எழுப்பி ஊழியம் தொடர்ந்து நடக்க அநுக்கிரகம் செய்வார். எனவே கார்மேகம் போல ஏராளமான பிரச்சனைகள் உங்களை மூடிக் கொள்ளும் என்றாலும் வெற்றி வேந்தன் இயேசு அவைகளை நீக்கி நீங்கள் மகத்தான வெற்றியை காண கிருபை செய்வார். சபைகள், ஊழியங்கள் வளர்ந்து பெருகும். கர்த்தர் உங்களை மேன்மேலும் பெருகச் செய்வார்.

ஆனாலும் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள் - யாத். 1: 12

கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள் - சங்கீதம் 126: 5

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களின் வாழ்க்கையை பாருங்கள். அவர்களில் அநேகர் கல்லாதவர்கள். ஆனால் இயேசு உயிர்த்தெழுந்த பிற்பாடு பரிசுத்த ஆவியை பெற்ற பிற்பாடு எத்தனையோ எதிர்ப்புகளை கடந்து சென்றார்கள். சீஷன் யோவானை தவிர எல்லாருமே கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமத்திலிருந்த வார்த்தைகள், கிறிஸ்துவை பற்றிய சுவிசேஷங்கள் அழிந்து போய்விட்டதா? இல்லவே இல்லை. கிறிஸ்துவின் மீது விசுவாசம் உள்ள மக்களை கொலை செய்தவர்கள் அநேகர் இன்று உயிரோடு இல்லை. அவர்களுடைய பேர் புகழும், கல்லறையும் கூட காணாமல் போயிற்று. ஆனால் கிறிஸ்து இயேசுவும், அவருடைய சுவிசேஷபணியும் ஒருபோதும் அணையாத விளக்காய் பிரகாசமாய் எரிகிறது. எத்தனை தான் கிறிஸ்துவின் அன்பின் அனலுக்குள் நெருக்கம், இருள், கொடுமை என்னும் தண்ணீரை ஊற்றினாலும் அந்த நெருப்பு அணையாது. நெருக்கப்பட்ட, நசுக்கப்பட்ட கள்ளம் கபடம் இல்லாத எளிய மக்களுடைய இதயங்களில் அது கொழுந்துவிட்டு எரிந்து கொண்டு தான் இருக்கும். கிறிஸ்துவின் அன்பு அணையா விளக்காய் உலகம் முழுவதும் பரவும். எத்தனை பலத்த காற்று அடித்தாலும் அது ஒருபோதும் அணையாது. எனவே நீங்கள் தைரியமாயிருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று - 2 தீமோத்தேயு 4:5




# Founders Day விசேஷ ஜெபம்

நாள் : 2021
மார்ச் 13
சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

நேரம் : காலை 9.00 மணி முதல்
மதியம் 2 மணி வரை

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி,
சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

RAKSHANA TV
சனி
இரவு 8.30 – 9.00

ARADANA TV
புதன் மாலை 6.00 – 6.30
சனி மதியம் 2.30 – 3.00

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV
சனி
இரவு 07.30 – 08.00

**ஆங்கிலத்தில்**

GOODNEWS TELEVISION
வியாழக்கிழமை
இரவு 8.30 – 9.00

# தங்கள் வாழ்வில் அற்புதங்களை பெற்ற பங்காளர்களின் சாட்சிகள்

## காணாமல் போன தங்க நகை கிடைத்தது!



எனது மூன்று பவுன் தங்க நகை காணாமல் போய்விட்டது. இதனால் மிகுந்த மனக்கஷ்டத்திற்கு ஆளானேன். எல்லா இடங்களிலேயும் தேடியும் கிடைக்கவில்லை. அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு ஜெபித்துக் கொண்டோம். ஜெபித்த ஜெப வீரர் கட்டாயம் உங்கள் நகை உங்களுக்கு கிடைக்கும் என்று நம்பிக்கையோடு கூறினார்கள். அவர்கள் சொன்னபடியே மீண்டும் ஒரு முறை வீட்டில் தேடிப் பார்த்தேன். அப்பொழுது எங்களது டேபிள் டிராயரில் அந்த நகை இருந்தது. அதை பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு கர்த்தரை துதித்தேன். மேலும், நான் சென்னையில் அரசு பள்ளியில் நூலக ஆசிரியராக வேலை பார்க்கிறேன். விடுமுறையில் வரும்பொழுது அங்கிருந்த மேலதிகாரியிடம் சொல்லிவிட்டு, எனது குறிப்பு நோட்டையும் அங்குள்ள பாதுகாப்பு பீரோவில் வைத்துவிட்டு வந்தேன். ஊருக்கு வந்த இரண்டு நாளில் உயர் அதிகாரிகள் சோதனையிட வந்துள்ளார்கள். அப்பொழுது இந்த நோட்டை காணவில்லை என எனக்கு தொலைப்பேசியில் பலமுறை கேட்டு தொந்தரவு செய்தார்கள். நான் இருக்கும் இடத்தை சொல்லியும் அதை தராமல் என்னை அதிகமதிகமாக பிரச்சனைக்குள்ளாக்கினார்கள். எனவே இது குறித்து Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு ஜெபிக்கக் கேட்டேன். அவர்கள் ஜெபித்து "அந்த நோட்டு இருக்கும் இடத்தை குறிப்பிட்டு சொன்னார்கள்" அதன்படியே நான் நேரில் சென்று அந்த நோட்டு இருக்கும் இடத்திலிருந்து எடுத்து உயர் அதிகாரிகளிடம் கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார். மனஉலைச்சலில் இருந்து விடுதலை தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! எனது பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியப் பணிகளுக்கு தருகின்றேன்.

- திருமதி. கஸ்தூரி, நாகர்கோவில்

## ஜெப எண்ணெயினால் அற்புதம்



எனது கணவர் கீழே விழுந்து காலில் அடிபட்டு மிகவும் கஷ்டப்பட்டார். சிகிச்சை மேற்கொண்டும் குணமாகாமல் இருந்தது. இந்நிலையில் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டேன். அக்கூட்டத்தில் ஜெப எண்ணெய் வாங்கிச்சென்று ஜெபத்துடன் வலியுள்ள இடத்தில் பூசி வந்தோம். கர்த்தர் அற்புதம் செய்தார். ஒருசில நாளிலேயே அற்புதமாக சுகமானது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. செல்வி, நாகர்கோவில்

## வறுமை நிலை மாறியது



எனக்கு திருமணமாகி மூன்று குழந்தைகள் உள்ளது. எனது கணவர் சிறிய அளவில் ஒரு கடை வைத்துள்ளார். அதில் வரும் வருமானம் மிகக் குறைவு என்பதால் கடன் பாரம் எங்களுக்கு அதிகமாகிவிட்டது. இந்நிலையில் நாகர்கோவிலில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டேன். ஜெப வேளையில் சகோதரர் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எனது பெயர் சொல்லி அழைத்து "உனது கணவர் வெளிநாடு செல்வார், உனக்கிருக்கும் கடன் பாரம் அனைத்தையும் கர்த்தர் நீக்குவார்" என்று கூறினார்கள். இதைக்கேட்டு நான் மிகுந்த ஆச்சரியமடைந்தேன். அவர்கள் கூறினது போலவே என் கணவர் மூன்று மாதத்திற்குள் வெளிநாடு செல்லும்படி கர்த்தர் கிருபை செய்தார்.

அதன்பிறகு எனது கடன் பாரங்கள் தீர்ந்தது. பிள்ளைகளை நன்கு படிக்க வைத்தோம். எங்களை பெயர் சொல்லி அழைத்து ஆசீர்வதித்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் கர்த்தர் செய்த அற்புதம்!



எனது கணவர் தொடர்ந்து சளி, இருமல், காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இருமும் பொழுது இரத்தம் வந்த படியால் அதிகம் பயந்தோம். சிகிச்சைகள் மேற்கொண்டும் சுகமாகவில்லை. இதனால் மிகுந்த கவலையடைந் தோம். இந்நிலையில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சியில் Dr.ஆனந்தஸ்திரா அவர்கள் செய்தியளித்து ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது நானும் சேர்ந்து எனது கணவரின் சுகத்திற்காக ஜெபித்தேன். அதன்பிறகு எனது கணவருக்கு சுகமாக ஆரம்பித்தது. இப்பொழுது பரிபூரண நலமுடன் உள்ளார். அதுமாத்திரமல்ல, என் பேத்தி Ph.D., படிப்பை படிக்க முடியாமல் தடை யாகவே இருந்தது. அதற்காகவும் சகோதரர் அவர்கள் ஜெபித்தார்கள். கர்த்தர் தடைகளை நீக்கினார். நல்லபடியாக மேற்படிப்பை முடித்தாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. சுஜாதா, நாகர்கோவில்

## ஜெபத்தினால் அரசாங்க வேலை கிடைத்தது!



நாகர்கோவில் கூட்டத்தில் கலந்துகொண்டு அரசாங்க வேலை கிடைக்க வேண்டுமென ஜெபம் செய்தேன். ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எனது பெயரை சொல்லி அழைத்து "உனக்கு அரசாங்க வேலை கிடைக்கும்" என தீர்க்கதரிசனமாக கூறினார்கள். அதன்படியே எனக்கு அரசாங்க வேலை கிடைத்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- Sis. ஜேன் சீலியா, நாகர்கோவில்

## கர்ப்பத்தின் கனியை பாதுகாத்த அற்புதர் இயேசு



எனது மகள் கர்ப்பம் தரித்து ஐந்து மாதமாக இருக்கும் பொழுது அதிகமான உதிரப் போக்கு ஏற்பட்டபடியால் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பரிசோதனை செய்த மருத்துவர்கள் குழந்தை வளர்ச்சியில்லாமல் இருக்கிறது, எனவே கலைத்துவிட வேண்டும் என கூறினார்கள். இதனால் நாங்கள் மிகுந்த கவலையடைந்தோம். இந்நிலையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை தொலைப்பேசியில் தொடர்புகொண்டு ஜெப உதவி நாடினோம். ஐயா அவர்கள் ஜெபித்து "பயப்படாதீர்கள்! குழந்தையை கலைக்க தேவையில்லை, கர்த்தர் பூரண வளர்ச்சியை கொடுப்பார், நல்லபடியாக குழந்தை பிறக்கும்" என்று கூறினார்கள். அதன்பிறகு ஒருமுறை மருத்துவரிடம் அழைத்து சென்றோம். மீண்டும் அவர்கள் பரிசோதனை செய்த பொழுது "குழந்தை வளர்ச்சி அடைந்துள்ளது எனவே கலைக்க தேவையில்லை" என்று கூறினார்கள். அன்பின் தேவன் அதேபோல எந்த குறையுமின்றி அருமையான குழந்தை பிறக்க கிருபை செய்தார். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்!

என் மகன் வேலை இல்லாமல் நீண்ட காலமாக கஷ்டப்பட்டு வந்தான். மகனுக்காக Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் ஜெபித்துக் கொண் டோம். கர்த்தர் நல்ல வேலையை அருளினார். திருமண காரியமும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. சவேரியா பிச்சை, நாகர்கோவில்

## மருத்துவம் படிக்க இடம் கிடைக்க கிருபை செய்த தேவன்!

எனது மகள் 12ஆம் வகுப்பு படிக்கும் பொழுது மிகவும் குழப்பத்தில் இருந்தாள். படிக்கவே போக மாட்டேன் என்று கூட சொன்னாள். இந்த நிலையில் நாகர்கோவில் குடும்ப ஆசீர்வாத ஜெபத்திற்கு மகளை

அழைத்து வந்து கலந்துகொண்டு சகோதரரிடம் ஜெபித்து சென்றேன். அந்த நாள் முதல் மகள் படிப்பில் கவனம் செலுத்தினாள். நல்ல மதிப்பெண் களுடன் வெற்றி பெற்றாள். நீட் (NEET) தேர்விலும் வெற்றி பெற்று மருத்துவ (M.B.B.S.) படிப்பில் இடம் கிடைக்க கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! - திருமதி. சுஜாதா, நாகர்கோவில்



## மூச்சு திணறலிலிருந்து அற்புத விடுதலை



எனது இரண்டாவது மகள் வெளிநாட்டில் இருக்கிறாள். அவளது பிரசவ நேரத்தில் மூச்சுவிட முடியாமல் அதிக கஷ்டப்பட்டாள். உடனடியாக அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு மகளுக்காக ஜெபிக்கக் கேட்டேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு மகளுக்கு அற்புதம் செய்தார். மூச்சு விடுவதில் உள்ள சிரமத்தை குறைத்து, சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறக்கும்படி கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. கிறிஸ்டல் ஜாய், நாகர்கோவில்

## தீர்க்கதரிசனத்தின்படியே ஆண் குழந்தை பிறந்தது!



பல வருடமாக அன்பரின் ஊழிய பங்காளராக இருக்கின்றேன். கர்த்தர் என் வாழ்க்கையில் அநேக அற்புதங்களை செய்திருக்கிறார். திருமணமாகி ஆறு வருடமாக குழந்தை பாக்கியம் இல்லாமல் பல அவமானங்களை சந்தித்தேன். இந்நிலையில் நாகர்கோவில் குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்துகொண்டேன். ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் "மகளே! உனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறக்கும், அதற்கு இம்மானுவேல் என்று பெயர் வைப்பாய்" என்று கூறினார்கள். அவர்கள் கூறியது போலவே எனக்கு அடுத்த ஆண்டில் ஆண் குழந்தை பிறந்தது. இம்மானுவேல் என்று பெயர் வைத்தோம். அதுமாத்திரமல்ல, கணவரின் தொழிலையும் கர்த்தர் ஆசீர்வதித்து பெருகச் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. சகாய ஜெமிலா, நாகர்கோவில்

## மனநிலை பாதிப்பிலிருந்து அற்புத விடுதலை

எனது பேரன் பால் பிரணவ் சிறு வயது முதல் மனநிலை பாதிப்பினால் அடிக்கடி கோபப்படுவான். கையில் கிடைத்ததை எல்லாம் தூக்கி அடிப்பான். இதனால் நாங்கள் அனைவரும் அவனை நினைத்து மிகவும் கவலைப்பட்டு வந்தோம். பல இடங்களுக்கு அழைத்து சென்றும் விடுதலை கிடைக்கவில்லை. இந்நிலையில் சென்னை தனி ஜெப நாளில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்து பேரனுக்காக ஜெபித்துக் கொண்டோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு மனநிலை பாதிப்பிலிருந்து பேரனுக்கு பூரண விடுதலையை கட்டளையிட்டார். இப்பொழுது பேரன் நல்ல சுகத்தோடு, முன்பு போல கோபப்படாமல் அமைதியாக இருக்கின்றான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திரு.கோவிந்தசாமி, செங்கற்பட்டு

## 22 ஆண்டு கால சரீர வேதனை முற்றிலும் நீங்கியது

22 ஆண்டுகளாக முதுகு வலி, கால்வலி மற்றும் வாயு தொல்லையால் சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்து வந்தேன். மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்டால் ஒருசில நாட்கள் நன்றாக இருக்கும். மீண்டும் அந்த தொந்தரவுகள் வந்துவிடும். தாங்க முடியாத முதுகு வலியாலும், கால்வலியாலும் தொடர்ந்து கஷ்டப்பட்டு வந்தேன். கண்ணீரில் என் நாட்கள் கழிந்தது. இந்நிலையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் திருநெல்வேலி வந்த சமயம் ஜெபத்தில் கலந்துகொண்டு எனது பாடுகள் நீங்க ஜெபித்துக்கொண்டேன். ஜெப வேளையில் தேவ

வல்லமையினால் நான் பூரண சுகமானேன். சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி சங்கரம்மாள் சாந்தி, பாளையங்கோட்டை

## கேன்ஸர் நோயை குணமாக்கி ஜீவனை தந்த வல்லவர்!

என் பெயர் ஜெபா. நான் கேன்ஸர் வியாதியால் பாதிக்கப்பட்டபோது Dr.ஆனந்த ஸ்திரா அவர்களுக்கு கடிதம் எழுதி எனது நோய் சுகமாக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். பதில் கடிதத்தில் "உன் ஜீவனுக்கு ஒரு சேதமும் வராது" என்று எனக்காக ஜெபித்து எழுதினார்கள். அதேபோல கர்த்தர் எனக்கிருந்த கேன்ஸர் நோயை முற்றிலும் சுகமாக்கினார். இம்மட்டும் சுகமாய் பாதுகாத்து என் ஜீவனை கொள்ளைபொருளாக தந்து ஜீவிக்க கிருபை செய்துள்ளார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. ஜெபா பெனிட்டா, குழித்துறை

## தீய பழக்கத்திலிருந்து விடுதலை தந்த மாதேவன்

எனது கணவருக்கு சரீரம் முழுவதும் புண்ணாக இருக்கும். மேலும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். அவரால் மிகுந்த வேதனை களை நான் அனுபவித்து வந்தேன். Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் சரீரத்தில் இருந்த புண்கள் முழுவதும் குணமானது. குடியிலிருந்தும் தேவன் தாமே பூரண விடுதலையை தந்தார். எங்களுக்கென்று சொந்த வீடு கிடையாது. கடந்த 2020ஆம் ஆண்டு வீடு கட்டவும் சர்வ வல்ல தேவன் கிருபை செய்தார். எங்கள் குடும்பத்தில் கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!

- திருமதி. ஜான்சி, திருநெல்வேலி

## கட்டி மறைந்தது!

கடந்த இரண்டு மாதமாக எனது முதுகில் கட்டி ஏற்பட்டு மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வந்தேன்.



இந்நிலையில் சென்னையில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்துகொண்டேன். ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் சரீரத்தில் கட்டி உள்ளவர்களுக்காக ஜெபித்த பொழுது இயேசுவின் நாமத்தில் "கட்டிகள் கரைந்து போவதாக" என்று கூறியவுடன் அந்த நொடிப்பொழுதே முதுகில் இருந்த கட்டி உடைந்தது. நான் பரிபூரண சுகமானேன். அற்புத சுகம் தந்த தேவனை துதிக்கின்றேன்.

## சொந்த வீடு கட்ட வாசல் திறந்த தேவன்



எங்களுக்கு சொந்த வீடு இல்லாமல் மிகவும் கஷ்டப் பட்டு வந்தோம். இந்நிலையில் சென்னையில் நடைபெற்ற தனி ஜெபத்தில் கலந்துகொண்டு Dr.ஆனந்த ஸ்திரா அவர் களிடம் வீட்டிற்காக ஜெபித்துக் கொண்டோம். சகோதரர் ஜெபித்து "மகளே, சொந்தமாக வீட்டை கட்டும்படி கர்த்தர் உனக்கு அநுக்கிரகம் செய்வார்" என்று கூறினார்கள். நாங்களும் அந்த வார்த்தையை நம்பி ஒவ்வொரு நாளும் ஜெபித்து வந்தோம். ஒரு சில வருடத்திற்குள்ளாகவே நாங்கள் சொந்த வீடு கட்டும்படி கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

## அறுவை சிகிச்சையின்றி அற்புத சுகம் கிடைத்தது!

நான் அதிக நாட்களாக தைராய்டு பிரச்சனையினால் மிகுந்த வேதனையை அனுப வித்து வந்தேன். மருத்துவர்கள் எனக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று தேதியும் குறித்து விட்டனர். இந்நிலையில் சென்னையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர் களிடம் எனது வியாதி குணமாகும்படி ஜெபிக்கக் கேட்டேன். அவர்களது உருக்கமான ஜெபத்தினால்



கர்த்தர் எனக்கு இரங்கினார். அற்புத சுகத்தை நான் பெற்றுக் கொண்டேன். இப்பொழுது தைராய்டு பிரச்சனை ஏதும் எனக்கில்லை. அதுமாத்திர மல்ல, எனது அம்மா பித்தபையில் ஏற்பட்ட கல் பிரச்சனையினால் கை, கால் வீங்கிக் கொள்ளும், காய்ச்சல் அடிக்கடி வந்து அதிக கஷ்டப்பட்டார்கள். மருந்து, மாத்திரை சாப்பிட்டும் குணமாகவில்லை. Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் அம்மாவிற்காக ஜெபித்தார்கள். ஜெபத்தின் பலனாக அம்மாவின் பித்தபையில் இருந்த கல் தானாக மறைந்தது. தெய்வீக சுகத்தை அம்மா பெற்றுக் கொண்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. மீரா, சென்னை

## இரட்டிப்பான நன்மையை அருளின அற்புதர்

எனது அண்ணனுக்கு நீண்ட நாட்களாக வேலை கிடைக் காமல் இருந்தது. ஐயா ஜெபத்தினால் ஷார்ஜாவில் நல்ல வேலை கிடைத்துள்ளது. எனது திருமண காரியத்திற்காக ஜெபித்துக்கொண்டேன். "மணமகன் தேடி வருவார்" என்று சகோதரர் கூறினார்கள். அதேபோல கர்த்தருக்கு பயந்த நல்ல மணமகன் அமையும்படி கர்த்தர் கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றேன்.



- Sis. ஜோனா ஷீபா, சென்னை

## ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பாக்கியம்



என் மகளுக்கு திருமணமாகி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக குழந்தை பாக்கியம் இல்லாமல் சொல்லொண்ணா துயரத்தை அனுபவித்து வந்தாள். சேலத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் மகளை அழைத்து வந்து கலந்து கொண்டு Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் ஜெபித்து சென்றேன். கர்த்தர் கிருபையாக இரண்டு குழந்தைகளை மகள் பெற்றெடுக்கும்படி கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸதோத்திரம்!

- திருமதி. ராஜம்மாள், சேலம்


## திருச்சியில் குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2021 மார்ச் 27 சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 2 மணி வரை

தேவசெய்தி : Dr. ஆனந்தஸ்திரா குடும்பத்தினர்



dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org



# பறந்து காக்கும் பட்சிகள்

தேவ செய்தி : Mrs. மார்க்கிரேட் ஸ்திரா

**பறந்து காக்கிற பட்சிகளைப்போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துத் தப்பப்பண்ணுவார்; அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார் – ஏசாயா 31:5**

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான வாசகர்களே!

இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்திலே உங்களை சந்தித்து, உங்களோடு தேவனுடைய வார்த்தையை பகிர்ந்துகொள்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்த அன்பரின் ஊழியப் பத்திரிக்கையின் மூலமாக உங்களில் அநேகர் அநேக நன்மைகளை பெற்றிருப்பீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. நிச்சயமாகவே வேதாகமத்தில் இருக்கிற அநேக வாக்குத்தத்தங்களில் எனக்கு மிகவும் ஆறுதலாய் இருக்கின்ற வாக்குத்தத்தங்களில் ஒன்று தான் மேற்கூறிய வசனம். கொடூரமான நிகழ்வுகள் மற்றும் பயம் நிறைந்த இந்த உலகத்தில் நம்மை காக்கும் தேவன் நமக்கு இந்த அருமையான வாக்குத்தத்தை கொடுத்திருக்கிறார். ஒருவேளை பல ஆயிரக்கணக் கான வருடங்களுக்கு முன்பாக இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டாலும் இன்றும் நமக்கு இது சரியான ஒரு வாக்குத்தத்தமாய் பொருந்தக்கூடியதாக இருக்கிறது அல்லவா? எந்த ஒரு தாய் பறவையும் தன் குஞ்சுகளை தன் உயிரினும் மேலாய் பாதுகாக்கும். விசேஷமாக கோழி, பருந்து, வாத்து போன்ற பறவைகள் ஆபத்தான நேரத்தில் தன்னுடைய குஞ்சுகளை தன்னுடைய செட்டைகளின் கீழ் மறைத்து பாதுகாத்துக்கொள்ளும். இந்த அருமையான ஒரு உதாரணத்தை சொல்லி தேவன் நம்மை பாதுகாக்கிற விதத்தை இந்த வசனம் கூறுகிறது.

தேவனுடைய பாதுகாப்பு நமக்கு இந்த உலகில் இன்றியமையாதது. அவருடைய பாதுகாப்பு இல்லாவிடில் நாம் எந்த காரியத்தையும் தைரியமாக, செவ்வையாக செய்ய முடியாது. ஏனெனில் இந்த உலகமும், சாத்தானும் நம்மை எல்லாவிதத்திலும் விழத்தள்ள வேண்டும் என்று தான் நினைக்கும். அந்நேரங்களில் நம்மை பாதுகாப்பாய் வைத்திருப்பது நம்முடைய தேவனாகிய கர்த்தரே! ஒரு தாய் பறவையை போலவே நம்மை மிகுந்த பணிவாய், அக்கறையுடன் வலுவாமல் காக்கிறார். இந்த செய்தியில் நம்மை காக்கும் தேவன் எந்தெந்த விதங்களில் நம்மை காக்கிறார் என்று நாம் பார்க்கலாம்.

## நம் தேவாதி தேவன் நம்மை ஆவிக்குரிய ஜீவியத்தில் வலுவாமல் காக்கிறார்

இந்த மாயையான உலகில் ஒவ்வொரு நாளும் நம்மை சுற்றிலும் அநேக பிரச்சனைகளும், பாடுகளும் சூழ்ந்திருக்கிறது. பிசாசு சோதனையின் மேல் சோதனையை கொடுத்து நாம் எப்படியாவது தேவாதி தேவனை விட்டு தூரப்போய் விட வேண்டுமென்று விரும்புகிறான், முயற்சிக்கிறான். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மாம்சப் பிரகாரமாக நாம் ஒரு நாளும் அவனை ஜெயிக்கவே முடியாது. நம்மையும் அறியாமல் நாம் அநேக சோதனைகளில் விழுந்து விடுகிறோம். பிறகு நாம் ஏன் இப்படி செய்தோம் என்று சொல்லி யோசிக்கிறோம், வருத்தப்படுகிறோம். அந்த சூழ்நிலைகளில் தேவாதி தேவன் நம்மோடுகூட இருந்து நம்மை வலுவாதபடி காக்கிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த பொழுதே தம்முடைய சீஷர்களுக்காகவும், அவர்கள் மூலமாய் தம்மை அறிந்தவர்களுக்காகவும் ஜெபித்ததை நாம் பார்க்கிறோம்.

நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளு கிறேன்; உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்

கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களா யிருக்கிறார்களே.

நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளு கிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன் - யோவான் 17:9, 20

நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் - யோவான் 17:15

ஆம்! இயேசு கிறிஸ்துவே தம்முடைய சீஷர்களுக்காக ஜெபித்திருப்பார் என்றால் நாம் எம்மாத்திரம். நிச்சயமாகவே நாம் சந்திக்கின்ற எல்லா போராட்டங்கள், சோதனைகளின் மத்தியிலும் பரிசுத்த ஆவியானவரே நம்மை தம்முடைய பிள்ளையாக பாதுகாத்துக்கொள்கிறார். யூதா 24,25ல் எழுதி இருக்கிறபடி பரலோகத்தில் நாம் அவர் சந்நிதானத்தில் போய் நிற்குமளவும் நாம் வலுவாமல் அவருடைய பிள்ளைகளாக இருக்கும்படியாக உதவி செய்கிறார்.

ஒருமுறை ஒரு வாலிபன் தன்னுடைய இளம் வயதிலேயே தன் தேசத்தின் ராணுவத்தில் சேர்ந்தான். அவன் சில வருடங்கள் கழித்து தன் தேசத்திற்கு திரும்பிய பொழுது அவனுடைய வாழ்க்கை தலைகீழாக மாறினது. தன்னுடைய மனக்கவலை களை போக்க போரில் கண்ட காட்சிகளை மறக்க குடிக்க ஆரம்பித்தான். முடிவில் அது மிகப்பெரிய ஒரு கெட்ட பழக்கமாய் அவனை பின்தொடர்ந்தது. தன்னால் மீள முடியாத சூழ்நிலையில் செய்வதறி யாமல் யாருடைய அறிவுரையையும் கேட்காமல் துன்மார்க்கமாய் வாழ ஆரம்பித்தான். அவனுடைய குடும்பத்தினர் அனைவரும் அவனை வெறுத்து ஒதுக்கினார்கள். கெட்ட சகவாசகங்களில் ஈடுபட்டதின் நிமித்தம் எல்லாருடைய வெறுப்பையும், கோபத்தையும் சம்பாதித்து கொண்டான். சில நாட்கள் சிறைச் சாலையில் வைக்கப்பட்டான். இருப்பினும் அவன் திருந்தவில்லை. இந்த சூழ்நிலையில் ஒரு நாள் செத்துவிட வேண்டுமென்று முடிவெடுத்தான். தான் உட்கொள்கிற போதை பொருட்களை வேண்டும் என்றே அதிகமாய் எடுத்தான். தான் மயங்கி மரிக்கப் போகும் தருவாயில் "இயேசுவே நீர் ஒருவர் இருப்பீர் என்றால் எனக்கு உதவும், எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை" என்றான். அவன் விழிக்கும்போது மருத்துவமனையில் இருந்தான். அந்த மருத்துவமனையில் இருந்த அனைவரும் சொன்ன காரியம் நீ பிழைத்தது பெரிய அற்புதம். ஏனென்றால் நீ எடுத்த போதை பொருட்களின் அளவு மிக மிக அதிகம். இந்த அளவு எடுத்த பிற்பாடு யாரும் உயிரோடு இருக்க முடியாது. ஆனால் ஏதோ ஒரு நோக்கத்திற்காய் உன்னை இந்த உலகத்தில் கர்த்தர் உயிரோடு வைத்திருக்கிறார் என்றார்கள். இதைக் கேட்டு அவன் புத்தி தெளிந்தான். தன்னையும் அறியாமல் இயேசுவுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தான். எல்லா தீய பழக்கங்களையும் விட்டான். ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தான். அவன் மனந்திரும்புதலை பார்த்து தேவன் அவனுக்கு நல்ல வேலையை கொடுத்தார். பிறகு திருமணமாகி குடும்பமாய் பிள்ளைகளோடு சேர்ந்து இப்பொழுது ஊழியமும் செய்கிறான்.

ஆம் பிரியமானவர்களே! கர்த்தரை நம்பும் பிள்ளைகளுக்கு அவர் ஒரு நாளும் தீங்கு விளைவிப்பதில்லை. சோதனையிலிருந்து தப்புவிக்க உங்களால் முடியாவிட்டாலும் அவரை நோக்கி கூப்பிடுங்கள், "இயேசுவே எனக்கு உதவும்" என்று சொல்லுங்கள். தவிர்க்க முடியாத நண்பர்களுடைய பழக்கவழக்கங்களா? அவரிடத்தில் சொல்லுங்கள். வேலையின் நிமித்தம், குடும்பத்தின் நிமித்தம், பாவத்திற்குள் தள்ளப்படுகிறீர்களா? அவரிடத்தில் சொல்லுங்கள். தப்புவித்துக் கொள்ளும் வழியையும், தைரியத்தையும் அவர் உங்களுக்குக் கொடுப்பார். 1தெச. 5:23,24ல் நாம் பார்க்கிறபடி "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்த மாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப் படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மை யுள்ளவர், அவர் அப்படியே செய்வார்".

## உலகப் பிரகாரமாக எல்லா இக்கட்டுகளிலிருந்தும் அவர் நம்மை பாதுகாக்கிறார்

ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் மிகுந்த வைராக்கியத்தோடு வாழ்ந்தாலும் கூட பல சமயங் களில் உலகப் பிரகாரமாக அநேக பாடுகளையும், போராட்டங்களையும் சந்திக்கிறோம். இது போன்ற ஆபத்துக்களில் மனிதர்களுடைய உதவி அநேக

சமயங்களில் நமக்கு வீணும் விரத்தியுமாய் போய்விடுகின்றது. நமக்கு ஆபத்து நேரிடும் சமயத்தில் அதிகமான பேர் நமக்கு உதவி செய்ய முன்வரவே மாட்டார்கள். அப்படி முன்வந்தாலும் அவர்களால் பல நேரங்களில் இயலாமலும் போய்விடும். நாம் பரிதபிக்கப்படும் நிலைமையில் விடப்படுகிறோம். ஆனால் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் விசுவாசிக்கும் பொழுதோ அவர் எப்படிப்பட்ட ஆபத்திலிருந்தும் நம்மை பாதுகாத்து விடுவிக்கிறார். இஸ்ரேல் ஜனங்கள் எகிப்து தேசத்தை விட்டு புறப்படுகையில் அவர்களுடைய வழி மிகவும் ஆபத்துகள் நிறைந்ததாகவும், அநேக தடைகளை கொண்டதாகவும் இருந்தது. ஆனால் அவைகளின் மத்தியிலும் எந்த ஒரு தீங்கும் அவர்களுக்கு நேரிடாதபடி அவர்கள் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு வேண்டியதை மாத்திரம் கொடுக்க வில்லை. அவர்களுடைய சத்துருக்களினின்றும் அவர்களை பாதுகாத்தார். உபாகமம் 32:11 சொல்கிறது போல "கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறதுபோல," கர்த்தர் ஒருவரே அவர்களை வழி நடத்தினார்.

அன்பு தேவ பிள்ளைகளே! அவரே சர்வ வல்லமையுள்ள தேவன். அவர் நம்மோடு இருக்கையில் ஒரு தீங்கும் நம்மை அணுகாது. ஒவ்வொரு நாளும் தொலைக்காட்சியிலும், செய்தித் தாள்களிலும் நாம் பார்க்கின்ற காரியங்கள் நமக்கு மிகுந்த வேதனையை கொடுக்கிறது மாத்திரமல்லாமல் பயத்தையும் உருவாக்குகிறது அல்லவா? கலங்காதீர்கள்! உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடுகூட இருக்கையில் எத்தீங்கும் நேரிடாத படி அவர் உங்களை சுமந்து கொண்டு போவார், தப்புவித்துக் காப்பார்.

பல வருடங்களுக்கு முன்பாக நான் வாலிப வயதாக இருக்கையில் எனக்கு நடந்த ஒரு சம்பவத்தை உங்களோடுகூட பகிர்ந்துகொள்கிறேன். அச்சமயத்தில் எனது கணவர் ஒரு மருத்துவருடைய பரிந்துரையின்படி அந்த மருத்துவருக்கு தேவைப்பட்ட ஒரு கருவியை ஒரு நபரிடம் செய்ய கொடுத் துள்ளார்கள். அதை செய்யும் அந்த நபர் விலை அதிகமாக சொல்லி என்னுடைய கணவரிடத்தில் அந்த கருவியை கொடுத்துவிட்டார்கள். இதைக் கேட்ட எனது கணவரின் நண்பர் மருத்துவர் "ஆனந்த் இது இவ்வளவு விலையில்லை, குறைந்த விலைதான். ஆகவே நீ அந்த நபரிடத்தில் அதை சொல்லி மீதிப் பணத்தை பெற்றுக்கொள்" என்று சொன்னார். உடனே எனது கணவரும் அந்த நபருடைய வீட்டிற்கு சென்றார்கள். அங்கே அவர் இல்லை, அவர் மனைவி தான் இருந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் இப்படி அதிகமான விலைக்கு செய்து என்னை ஏமாற்றி விட்டீர்கள், எனவே அந்த கருவியே எனக்கு வேண்டாம் வைத்துக்கொள்ளுங்கள் என்று கொடுத்துவிட்டு வந்து விட்டார். அதே நாளில் கொஞ்ச நேரம் கழித்து நான் வீட்டில் என்னுடைய கடைசி மகளோடு தனியாக இருந்தேன். மகள் ஜேன் அப்பொழுது மிக சிறிய குழந்தை, என் கையில் அவளை தூக்கிக் கொண்டு அவளுக்கு சாப்பாடு ஊட்டிக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று மிகப் பெரிய சத்தம் கேட்டு வெளியே வந்தேன். பார்த்தால் அந்த நபர்கள் இருவரும் என் கணவரின் பெயரை சொல்லி தகாத வார்த்தைகளை சொல்லி சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களை பார்த்தவுடனே நான் மிகவும் பயந்து போனேன். என்ன செய்வதென்று தெரியவில்லை. உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டேன். அவர்கள் பேசுவதே மிகுந்த தரக்குறைவாக இருந்தது. அதுமாத்திரமல்லாமல், பயங்கர சத்தத்துடன் மிரட்டி இவளையும் தூக்கு, நாம் கொண்டு போய்விடுவோம் என்று மிரட்டினார்கள். அக்கம் பக்கத்தில் உதவவும் ஆளில்லை. அமைதியாக என்னுடைய மனதிற்குள்ளாகவே "இயேசப்பா இவர்களிடமிருந்து என்னை காப்பாற்றும்" என்று மனதிற்குள் அந்நிய பாஷைகளைப் பேசி ஜெபித்துக் கொண்டே இருந் தேன். அவ்வேளையில் கத்திக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் திடீரென்று ஐயோ எரிகிறது எரிகிறது என்று அலறினான். அதோ தீ, இதோ தீ, கதவுகளில் எல்லாம் தீ, பிள்ளையை சுற்றிலும் தீயாக இருக்கிறது என்று கதறிக் கொண்டே தன் அருகிலிருந்த அவனது சகோதரரிடம் உனக்கு தெரியவில்லையா? இந்த பிள்ளையை ஒன்றும் செய்ய வேண்டாம், அவளை சுற்றிலும் தீ எரிகிறது என்று கத்தினான். அந்த நொடிப் பொழுதே இருவரும் என் முன்பாக முழங்கால் படியிட்டார்கள். அப்பொழுது அவர்கள் சொன்ன காரியம் என் கண்களில் கண்ணீர் வரவழைத்தது. "அம்மா, நாங்கள் இந்த ஊரில் மிகப் பெரிய ரௌடிகள், எப்பொழுதும் ஆளை வெட்டும் கத்திகள், சைக்கிள் செயின் எல்லாம் வைத்திருப்போம். நாங்கள் தினமும் கூட கொலை செய்ய அஞ்ச

மாட்டோம். உங்கள் கணவரை ஏமாற்றி விட்டோம் தான் ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் உங்களையும் ஏதாவது செய்துவிட வேண்டும் என்று தான் இங்கு வந்தோம். ஆனால் நீங்கள் வணங்குகின்ற சாமி எங்களை தீங்கு செய்ய விடவில்லை. எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" என்று தங்களை தாழ்த்தினார்கள்.

அன்பிற்குரியவர்களே! தீங்கு செய்துவிட வேண்டும் என்று வந்தவர்கள் என்னிடத்தில் ஜெபித்து விட்டு சென்றார்கள். இது கதை அல்ல, என் வாழ்க்கையில் நடந்த ஒரு மறக்க முடியாதசம்பவம். இதே தேவன் இன்றும் உயிரோடு இருக்கிறார், ஜீவிக்கிறார்! நிச்சயமாகவே அவர் உங்களை எல்லா தீங்கிற்கும் விலக்குவார். யாரும் உங்களை ஏமாற்றி உங்களுக்கு தீங்கு செய்துவிடாதபடி அவர் உங்களை பாதுகாப்பார். சோர்ந்து போகாதிருங்கள்.

**உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.**

**உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்குவரும் பலனைக் காண்பாய்**

**- சங்கீதம் 91 : 7, 8**

## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
## (Renovation)
## புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.**

தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

## ஜனவரி மாத கேள்விகளுக்கான சரியான பதில்கள்

1. யாக்கோபு, பரதேசியாய் (ஆதி.47:9)
2. பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் , எகிப்து தேசத்திலே விளையும் விளைச்சலில், யோசேப்பு, பார்வோனுக்கு. (ஆதி.41:17, 34-35)
3. ஆறு வருஷம் (யாத்.21:2) (உபா.15:12)
4. மூன்று தரம், கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக (யாத். 34:24)
5. மூன்று வருஷம், விருத்த சேதனமில்லாததாய் (லேவி.19:23)
6. மீகா, லேவியன், (நியாதி.17:10)
7. சாலொமோன் ராஜா, கர்த்தரின் ஆலயத்தைக் கட்ட (1இராஜா.6:1)
8. அறநூற்று அறுபத்தாறு தாலந்து நிறையாயிருந்தது (1இராஜா.10:15) (2 நாளா.9:13)
9. மூன்று வருஷத்திற்கு, சாலொமோன் ராஜா (1 இராஜா.10:22) (2 நாளா.9:21)
10. மோசே (சங். 90:9)
11. மூன்று அல்லது ஏழு வருஷ பஞ்சம், தாவீது (1 நாளா.21:11-12) (2 சாமு.24:13)
12. பன்னிரண்டாம் வருஷம், யோசியா (2 நாளா.34:1,3)
13. ராஜாவாகிய அகாஸ்வேரு (எஸ்தர் 1:2-3)
14. உசியா ராஜா மரணமடைந்த வருஷம், ஏசாயா (ஏசாயா 6:1)
15. சொப்பனங்களைக் கண்டதினால், நேபுகாத்நேச்சார். (தானி.2:1)

### சரியான விடை எழுதி குலுக்கல் முறையில் பரிசு பெறும் நபர்களுக்கு என் வாழ்த்துக்கள்

01. **Bro.** ஆன்ட்ரூஸ், மதுரை.
02. **Bro.** ஐசக், திருநெல்வேலி.
03. **Sis.** முத்தம்மாள், தூத்துக்குடி.



## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி**


திரு. ஜெரால்டு - 82203 17472

**சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள்**

திருமதி. ஆனிலெஸ்லி - 77081 53666

# இருளில் உதித்த விளக்கு
# Candle in the dark

1790ம் - ஆண்டுகளில் Baptist ஆலயங்களின் தலைவர்கள் அநேகர் சேர்ந்து நடத்தின கூட்டம் அது. இக்கூட்டத்தில் அநேகர் விவாதம் செய்துக்கொண்டிருந்தனர். குறிப்பாக ஒரு இளம் போதகர் எழும்பி நின்று "யாரும் அறியாத, யாரும் செல்லாத, வெளி நாடுகளுக்குச் சென்று இயேசுவை அறிவிப்பது மிக அவசியம்" என்று திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டேயிருந்தார். இதனால் எரிச்சல் அடைந்த வயதான போதகர் மிகுந்த சத்தமிட்டு, வாலிபனே, உற்சாக மிகுதியில் பேசாதே தேவன் புற ஜாதிகளை இரட்சிக்க வேண்டுமென்றால் உன்னையும், என்னையும் கலந்தாலோசிக்க மாட்டார். அதை தம் வழியில் செய்வார்" என்று அதட்டினார். அந்த இளம் போதகரின் பெயர்தான் வில்லியம் கேரி - இன்றும் உலகம் போற்றும் மிஷனெரி.



வில்லியம் கேரி இங்கிலாந்து தேசத்திலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்து, காலணி (shoe) தைக்கும் தொழிலை செய்துக் கொண்டு வந்தவர். அவர் தன் வாலிப வயதில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர். ஒருவரிடத்தில் கிரேக்க இலக்கிய புத்தகத்தை வாங்கி படித்தார். அதன் பின் தானாகவே புதிய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் படிக்க கற்றுக்கொண்டார். shoe தைக்கும் தொழில் சரியாக நடைபெறாததினால் மிகுந்த வறுமையில் வாழ்ந்தது வில்லியம் கேரி குடும்பம். அதன் மத்தியிலும் எபிரெயம் (Hebrew), இலத்தீன் (Latin) என்று தாமாகவே பல மொழிகளைக் கற்றுக்கொண்டு பிரசங்கிக்க ஆரம்பித்தார்.

அழகான மனைவி, பிள்ளைகள் இருந்தப் பொழுதும் அவருடைய தாகம் எல்லாம் அழிந்துக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் சொல்ல வேண்டும் என்பதிலும், அத்துடன் பிற தேசங்களுக்கும் சென்று சுவிசேஷத்தை சொல்வதிலுமே இருந்தது. .

1792-ல் அவரே ஒரு மிஷனெரி இயக்கத்தை ஆரம்பித்தார். "தேவனிடம் பெரிய காரியங்களை எதிர் பார். தேவனுக்காக பெரிய காரியங்களை செய்" (Expect Great Things from God, Attempt Great Things for God) என்பதையே தன் இலட்சியமாக கொண்டிருந்தார்.

1793-ல் தன் குடும்பத்துடன் இந்தியா வந்தடைந்தார். இங்கு வந்திருந்த நாட்களில் வறுமை, வியாதி, தனிமை அவரை அதிகமாக வாட்டியது. அந்த நேரத்தில் இங்கிலாந்தில் உள்ள தன் கிறிஸ்தவ நண்பருக்கு இவ்வாறு கடிதம் எழுதினார். "அற்புதமான, புதிதான இடத்தில் உள்ளேன். குடும்பம் பெரிது. ஆனால் எங்கள் தேவைகளை சந்திக்க ஒருவரும் இல்லை. தேவன் ஒருவரே எனக்கு உண்டு."

கல்கத்தாவில் பெங்காலி மொழியை கற்ற சிறிது நாட்களில் பரிசுத்த வேதாகமத்தை பெங்காலியில் மொழி பெயர்க்க ஆரம்பித்தார். தனது மிஷனெரி பணியை ஊக்கத்துடன் செய்துகொண்டிருந்த நாட்களில் அவருடைய 5 வயது மகன் மரித்துப்போனான். அதனால் அதிக துக்கமடைந்த அவருடைய மனைவி மனநலம் பாதிக்கப்பட்டார். மனைவிக்கு சுய புத்தியில்லாத படியினால் அவரை ஒரு அறையில் அடைத்து வைக்க வேண்டிய சூழ்நிலை வில்லியம் கேரிக்கு ஏற்பட்டது.

1799-ல் டென்மார்க் நாடு, வில்லியம் கேரிக்கு கல்கத்தாவில் செராம்பூர் (Serampore) என்ற இடத்தில் பாதுகாப்பு கொடுத்து குடியிருக்க அனுமதி அளித்தது. அவர் இந்தியா வந்து 7 வருடம் கழித்து முதல் முறையாக ஒரு ஆத்துமாவை கிறிஸ்துவுக்குள் நடத்தினார். 7 வருடம் 2 மாதங்கள் கழித்து பெங்காலி மொழியில் புதிய ஏற்பாடு அச்சடிக்கப்பட்டது. அவர் அதிகாலை 5.45 மணிக்கு எழும்பும் பழக்கத்தை கொண்டிருந்தார். தேவன் அவருக்கு அநேக மொழிகளை சுலபமாக கற்றுக் கொள்ளக்கூடிய தாலந்தைக் கொடுத்திருந்தார். இந்த தாலந்தை பயன்படுத்தி வில்லியம் கேரி பெங்காலி, ஒரியா,மராத்தி, ஹிந்தி, அஸ்ஸாமிஸ், சமஸ்கிருதம் போன்ற 209 மொழிகளில் வேதாகமத்தை மொழி பெயர்த்து அச்சடிக்கவும் செய்தார்.

மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து, அநேக உபத்திரவங்களின் மத்தியிலும் தனக்கு இருந்த எல்லாவற்றையும் துச்சமாக கருதி தேவனுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்தார். தன்னிடம் வந்த ஒருவருக்கும் இல்லை எனச் சொல்லாமல் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தார். அது மாத்திரமல்லாமல் உடன் கட்டை ஏறுதல் (சதி) பச்சிளங் குழந்தைகளை கொலை செய்தல் (Infanticide) போன்ற அநேக மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்காக ராஜாராம் மோகன்ராய் போன்ற பெரும் தலைவர்களுடன் சேர்ந்து அரும்பாடு பட்டார்.

அறிவியல், சரித்திரம், குறிப்பாக தாவரவியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் வில்லியம் கேரி. தான் செய்து வந்த எல்லா பணிகளுடன்கூட ஒரு கிறிஸ்தவ கல்லூரியையும் துவங்கினார். அக்காலத்தில் கிழக்கத்திய நாடுகளான இந்தியா, சைனா, ஜப்பான் தேசங்களில், ஸ்தாபிக்கப்பட்ட முதல் கிறிஸ்தவ கல்லூரி செராம்பூர் பல்கலைக்கழகம் தான். இன்றும் செராம்பூர் கல்லூரியில் ஆயிரக்கணக் கானோர் கிறிஸ்தவ படிப்புகளைப் படித்து ஊழியம் செய்கின்றனர்.

வில்லியம் கேரி இந்திய தேசத்தில் 41 வருடங்கள் இருந்து வேதாகம மொழி பெயர்ப்பிலும், கல்வி துறையிலும், சமூக மாற்றங்களிலும் முனைந்து நின்றார். இவருடைய முன் உதாரணத்தை வைத்தே உலகில் போற்றப்பட்ட மிஷனெரிகளான அதோனி ராம், ஜட்சன், ஹட்சன் டெய்லர், டேவிட் லிவிங்ஸ்டன் போன்றோர் தங்களை தேவனுக் கென்று அர்ப்பணித்தனர். தேவனுக்காக அறப்பணி செய்த வில்லியம் கேரி இருளில் உதித்த ஓர் வெளிச்சமே!


(Source) christianity today.com
whole some words.org
columbia.edu
Wikipedia.org



ஐதராபாத்தில்
குடும்ப ஆசீர்வாத ஜெபம்
நாள் : 2021
மார்ச் 6
சனிக்கிழமை
இடம் : YMCA ஹால்,
SP ரோடு எதிரில், யசோதா மருத்துவமனை
மணிக்கூண்டு அருகில், செகந்திராபாத்
தேவசெய்தி
Dr. ஆனந்தஸ்திரா
நேரம் :
காலை 9.00 மணி முதல்
மதியம் 2 மணி வரை
தொடர்புக்கு : 99944 82791; 91770 87860
& 99445 36343

# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை



கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்து போகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன் - யாத். 34:6

ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு

- கொலோ. 3 : 12

தயையுள்ள மனுஷன் தன் ஆத்துமாவுக்கு நன்மை செய்துகொள்ளுகிறான் - நீதி. 11:17

தரித்திரனுக்குத் தயை செய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான் - நீதி. 14:31

தயையும் சத்தியமும் ராஜாவைக் காக்கும்; தயையினாலே தன் சிங்காசனத்தை நிற்கப் பண்ணுவான் - நீதி. 20 : 28

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான தேவ பிள்ளைகளே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

கடந்த 43 ஆண்டுகளாக தேவனுடைய அளவற்ற கிருபையினால் நானும், உங்கள் சகோதரியாகிய எனது மனைவியும் திருமணமான நாளிலிருந்து கர்த்தருடைய மிகுந்த இரக்கத்தாலும், தயையாலும் நிரப்பப்பட்டு திக்கற்ற பிள்ளைகளையும், அநாதைகளையும் எடுத்து வளர்க்கவும், படிக்க வைக்கவும், அவர்களை உருவாக்கவும், ஆளாக்கவும் அன்புள்ள தேவன் உதவி செய்தார். வீட்டில் ஒரு கடுகு விதை போல ஆரம்பிக்கப்பட்ட இந்த நற்கிரியையானது இன்று ஆயிரக்கணக்கான மக்களுக்கு பயன் தரும் ஆலமரத்தை போல பரந்து விரிந்து உதவி செய்வதை நாம் பார்க்கிறோம். முதலாவது இதற்கு முக்கிய காரணம் நம்மை படைத்த தேவனாகிய கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமும், தயையுமுள்ள தேவன் எனபதே. தயை என்று சொல்லும் பொழுது நீதி. 19:22ன் படி நன்மை செய்ய மனுஷன் கொண்டிருக்கும் ஆசையே தயை ஆகும். ஆம் தேவனாகிய கர்த்தர் தமது ஒரே பேறான குமாரன் இயேசுவை உலகிற்கு அனுப்பி பாவிகளாகிய நம்முடைய பாவங்களை சிலுவையில் சுமக்கவும், நம்மை குணமாக்கவும் நன்மை செய்கிறவராய் சுற்றி திரிந்தார் என்று நாம் அறிவோம். இயேசு சென்ற இடமெல்லாம் நன்மை செய்தார். இதுபோல நாமும் நம்மால் முடிந்த நன்மைகளை செய்வோம்.

ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் சுமார் 4 பெண் பிள்ளைகளையும், 4 அநாதை சிறுவர்களையும் நன்றாய் படிக்க வைத்து உருவாக்கினோம். அதில் ஒருவன் மருத்துவராக இருக்கிறான். மற்ற வாலிப பிள்ளைகளும் நன்கு படித்து, திருமணமாகி நல்ல நிலையில் இருக்கிறார்கள். இப்படியாக நாம் செய்த நன்மையின் பயனாக அரசு அங்கீகாரத்தை பெற்று இன்று பெரிய அளவில் உதவும் கரமாக, நன்மை செய்யும் களஞ்சியமாக மாறியுள்ளது. இன்று மக்களை பயமுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய கொரோனா வியாதிகளின் மத்தியிலும் இதுவரைக்கும் அநேக ஆயிரம் பேருக்கு உதவி செய்து இருக்கிறோம். புலம் பெயரும் ஏழை தொழிலாளிகள், நூற்றுக்கணக்கான விதவைகள், அன்றாட வாழ்க்கைக்கு தேவையான வற்றை கூட சந்திக்க வழியில்லாதவர்கள், வெயிலிலும், மழையிலும் ஓட்டை குடிசையில் வாழும் மக்கள், ஐந்து வயதிலேயே தரித்திரத்தின் நிமித்தம் கூலி வேலைக்கு அனுப்பப்படும் பிள்ளைகளுக்கும் உதவுகிறோம். விசேஷமாக சிறு குழந்தைகள்

இரண்டரை வயது முதல் கல்லூரி படித்து முடிக்கும் வரைக்கும் அவர்களுக்கு தேவையான ட்யூசன் வகுப்புகள், உணவு மற்றுமான பள்ளிக்கு தேவையான உபகரணங்கள், சீருடைகள் முதற் கொண்டு வாங்கிக் கொடுத்து ஆதரிக்க கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். இதற்காக தேவனை துதிக்கிறோம். ஒருபோதும் சோர்வடையாமல் கொடுக்கின்ற உங்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

தர்மபுரி மாவட்டம் தொப்பூர் அருகிலுள்ள செட்டிபட்டி கிராமத்தில் 110 ஏழை பிள்ளை களுக்கு டிபன் கேரியர், பாய், ஜிங்கோவைட் சத்து மருந்துகள், காப் சிரப் (Cough Syrup) புரோட்டின், நல்ல ஒரு ஸ்கூல் பேக் மற்றும் பிரியாணி கொடுக்கப்பட்டது. இவர்களில் 25 சதவிகிதம் பேர் அநாதைகள், 50 சதவிகிதம் பேர் Semi orphan, மீதம் 25 சதவிகிதம் பேர் மிகுந்த ஏழைகள். பிள்ளைகள் இதுபோன்ற வெகுமதியை முன்பின் பார்த்ததில்லை. மிகுந்த ஏக்கத்தோடும், வாஞ்சையோடும் வந்திருந்தார்கள்.

மேலும், வேப்பிலைபட்டி, சென்ராயன் பாளையம், வெள்ளாளகுண்டம், கருக்கம் பாளையம், சின்னகவுண்டம்பாளையம் இப்படிப்பட்ட கிராமங்களை சேர்ந்த சுமார் 400 பிள்ளைகளுக்கு உதவியுள்ளோம். அதுபோக 800 பிள்ளைகளுக்கு ட்யூசன் மற்றும் சாப்பாடு ஏனைய உதவிகளும் வழங்கப்பட்டது.

நமது ட்யூசன் மையம் மூலம் பிள்ளைகள் நல்ல குணத்தை கற்றுக்கொள்கிறார்கள். அதில் மிகவும் பரிதாபம் என்னவென்றால், சிறு பிள்ளைகள் தங்கள் அறியாமையால் பல தெரியாத காரியங்களை செய்துவிடுகிறார்கள். ஒரு ரூபாய்க்கு விற்கும் சில மிட்டாய்களை சாப்பிட்டு அதினால் சிறுநீரகக் கோளாறும், ஒரு சிலருக்கு கேன்ஸர் நோயும் வந்து விடுகிறது. நேரத்திற்கு நேரம் சரியான உணவு இல்லாத படியால் இரத்த சோகையாக மாறி விடுகிறார்கள். மேலும் பெற்றோர்கள் மதுபானத்தை அருந்தி விட்டு பேசும் கெட்ட வார்த்தைகளை பிள்ளை களும் பேசுகிறார்கள். இதனிமித்தம் பிள்ளை களின் வாழ்க்கை சீரழிகிறது. 13 வயதிற்கு மேல் பெண் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாமல் குறைந்த வயதிலேயே விரும்பியோ அல்லது பெற்றோரின் இஷ்டப்படியோ திருமணம் செய்து வைத்து 3,4 அல்லது அதற்கு மேலும் பிள்ளைகளை பெற்றெடுக்க விடுகிறார்கள். ஆனால் இப்பெண்களை திருமணம் செய்கிற ஆண்கள் தங்களது இளம் மனைவிமார்கள் பிள்ளைகளை பெற்றவுடன் மனைவியை விட்டு விட்டு திருமணமாகாத வேறு பெண்ணுடன் ஓடி விடுகிறார்கள். அவளுக்கும் குழந்தையை கொடுத்து விட்டு ஓடிவிடுகிறார்கள். எனவே தாயும், பிள்ளைகளும் வறுமையில் தள்ளப் படுகிறார்கள்.

நமது அறக்கட்டளை மூலம் நடத்துகின்ற ட்யூசன் மையங்களில் பள்ளி முடிந்தவுடனே மாலை 4 மணி முதல் இரவு 8.30 வரைக்கும் இலவசமாக, பிரதிபலன் கருதாமல் பள்ளி பாடங்கள் நல்ல முறையில் சிறந்த ஆசிரியர்கள் மூலம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இதனை பார்க்கின்ற அவ்வூர் நாட்டாமை, ஊர் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் போற்றுகின்றார்கள்.

ஜார்ஜ் முல்லர் என்னும் தேவ மனிதன் இரண்டாம் உலகப்போரின் போது நாலாயிரம் அநாதைகளை பாதுகாத்து வளர்த்தது போல கர்த்தருக்கு சித்தமானால் நாலாயிரம் பிள்ளைகளுக்கு நானும், நீங்களும் இணைந்து உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். இக்காரியத்திற்கு நீங்கள் உதவ முன்வருவீர்களா? கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தனையே நமக்குள்ளும் இருப்பதாக! ஏழைகளுக்கு சொல்லிக் கொடுக்கப்படும் நல் பாடங்களை ஒருபோதும் நாம் வியாபாரம் ஆக்கக் கூடாது. சிறு பிள்ளைகளை பார்க்கும் பொழுது அவர்களுடைய கள்ளம் கபடற்ற முகங்களை பார்க்கும்பொழுது என் உள்ளம் உருகி, என் கண்களிலிருந்து கண்ணீர் தான் வரும். உண்மையான, பரிசுத்தமான அன்பிற்காக ஏங்குகிற பிள்ளைகள் ஏராளம்.

அடுத்த கட்டமாக அநேக குடிசைகளை நாம் விஜயம் செய்தோம். குடிசையில் ஒரு Asbestos sheet/அஸ்பெஸ்டாஸ் கூட கிடையாது. கிழிந்த ஓலைகளை வைத்து கூரையை மேய்ந்திருக்கிறார்கள். அதில் பாம்பு, பூரான் எல்லாம் வருகிறது. சற்று யோசித்து பாருங்கள். நாம் வசதியுள்ள வீடுகளில் வசிக்கும் பொழுது, இப்படிப்பட்ட ஏழை மக்களுக்கென்று மழை தண்ணீர் உள்ளே வராமல், வெப்பத்தை தாங்கக் கூடிய ஒரு சிறிய வீட்டை நாம் கட்டி தரலாமே? இதற்கு ஒரு வீடு கட்டுவதற்கு குறைந்தது Rs.50,000/- நல்லபடியாக கட்டித் தர Rs.3,00,000/- வரை செலவாகும். இந்த நல்ல திட்டத்தை *2021*மார்ச் *13* எனது பிறந்த நாள் முடிந்து ஏப்ரல் மாதத்திலிருந்து கர்த்தருக்கு சித்தமானால் ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறேன். இரண்டாயிரத்திற்கு மேல் தருகிறவர்கள் காசோலை அல்லது வங்கி மூலமாக அனுப்புவீர்கள் என்றால் உங்களுக்கு 80G சட்டப்படி வரிவிலக்கு விண்ணப்பம் அனுப்பி தருகிறோம். எனவே கலங்காதீர்கள்! நாம் வேண்டாத, வீண் செலவுகளை தவிர்த்து இப்படிப் பட்ட நல்ல காரியங்களை செய்வோம்.

**இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் - மத்தேயு 5 : 7**

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

**எமது YouTube சேனல்களை Subscribe செய்யவும்**



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

ministryofjesus.in

drjane15

**Ministry of Jesus**
**WhatsApp No. 95004 87059**

# ஜனவரி மாதம் செய்த அறப்பணிகள்

## வேப்பிலைபட்டி, சென்ராயன் பாளையம், வெள்ளாள குண்டம் ஆகிய கிராமங்களில் உதவிகள் பெற்ற குழந்தைகள்











# S.J.S.T. HOSPITAL கிராமப்புற மருத்துவ சேவை மையம்

இன்று நாம் வாழும் உலகில் மருத்துவத் துறை எவ்வளவு முன்னேறினாலும் இன்னமும் மருத்துவ வசதி இல்லாதபடி அநேகர் கஷ்டப்படுவதை நாம் பார்க்கிறோம். நமது கிராமப்புற மருத்துவமனை யானது தேவனுடைய அளவற்ற கிருபையால் இப்பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவமனை யாக மாறிவிட்டது. மிகவும் முக்கியமாக ஸ்கேன், அறுவை சிகிச்சை அரங்கம் தேவை. இதற்காக ஜெபியுங்கள்! அதோடுகூட நல்ல படித்த மிஷனரி அர்ப்பணிப்புள்ள செவிலியர்கள், மருத்துவர்கள் தேவை. இங்கு வருகிற நோயாளிகள் அனைவரும் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் வாழ்பவர்கள். நமது மருத்துவமனை அன்பரின் ஊழியத்திற்கு சொந்தமான இடத்தில் இயங்கி வருகிறது. சீக்கிரமாக மருத்துவமனைக்கென்று சொந்த இடமும், அதற்குரிய கட்டிடமும் கட்டப்பட ஜெபியுங்கள். கடந்த குளிர் காலங்களில் அநேகர் சளி, காய்ச்சலினால் மற்றும் பல்வேறு நோய்களினாலும், விபத்துக்களினாலும் பாதிக்கப்பட்ட நோயாளிகள் நம் மருத்துவமனைக்கு வந்து பயன் பெற்றனர். இந்த மருத்துவமனையில் சீக்கிரத்தில் இரவு நேர சேவையையும் ஆரம்பிக்க வேண்டும். எனவே உங்களுக்குத் தெரிந்த நல்ல மருத்துவர்கள் இருந்தால் தெரியப்படுத்துங்கள். அதேபோல மூன்றரை ஆண்டுகள் செவிலியர் படிப்பு படித்தவர்களும் தேவை. நம்முடைய மருத்துவமனை நல்ல காற்றோட்டமான, சுகாதாரமான இடத்தில் அமைந்திருக்கிறது. நீங்களும் எப்போது வேண்டுமென்றாலும் இந்த மருத்துவமனையை விஜயம் செய்யலாம். நகரத்தில் இருக்கும் மருத்துவமனையை பார்க்கிலும் பத்தில் ஒன்று தான் இங்கு கட்டணமாக வாங்குகிறோம். எனவே அநேக கிராம மக்கள் இதன்மூலம் பயனடைகிறார்கள். இந்த மருத்துவமனையின் வளர்ச்சிக்காக அதிக ஊக்கமாக ஜெபியுங்கள்.

## வாசகர்கள் கவனத்திற்கு

இப்பத்திரிக்கையை வாசிக்கின்ற வாசகர்களாகிய உங்களில் யாருக்காவது நமது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் நீங்கள் வந்து சிகிச்சை பெறலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : **96553 18991**

வரும் வழி : திருச்சி மத்திய பேருந்துநிலையத்திலிருந்து திண்டுக்கல் சாலையில் (சுமார் 15 கி.மீ) உள்ள ஜே.ஜே. பொறியியல் கல்லூரி விடுதியின் எதிர்புறத்தில் நமது மருத்துவமனை உள்ளது.

## தேவை

அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் விண்ணப்பிக்கவும்.




**உங்களின் கனிவான கவனத்திற்கு...**
**தங்களைப் பற்றிய தகவல்களைப் புதுப்பியுங்கள்!**

*அன்பிற்குரிய பங்காளர்களே!*

உங்களைப் பற்றியப் பல புதிய தகவல்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வராமலேயே உள்ளது. எங்களிடம் உள்ள பதிவேட்டில் கூடுதல் தகவல்களைச் சேகரிக்க உள்ளோம். எனவே, தங்களைப் பற்றிய கீழ்க்காணும் தகவல்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

1. பங்காளர் பெயர் : ..............................................................................

2. பங்காளர் எண் : ..............................................................................

3. அலைபேசி எண் : ..............................................................................

4. WhatsApp No. : ..............................................................................

5. பிறந்தநாள் : ..............................................................................

6. திருமண நாள் : ..............................................................................

7. இ-மெயில் (e-mail) : ..............................................................................

8. முழு விலாசம் (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்): ..................................................

..............................................................................

..............................................................................

9. பிற இன்றியமையாத தகவல்கள்: ..............................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் சரியாகவும், தெளிவாகவும் இ-மெயில், கடிதம், டெலிகிராம், **WhatsApp No. 95004 87059** மூலமாகவும் தெரியப்படுத்தலாம். இவை உங்களை எளிதில் தொடர்பு கொள்ளவும், உங்களின் ஜெபத்தேவை அறிந்து இன்னும் ஊக்கமாய்ஜெபிக்கவும் உதவியாக இருக்கும்.

**இந்தப் பக்கத்தைக் கிழித்தோ அல்லது ஜெராக்ஸ் எடுத்தோ பூர்த்தி செய்து அனுப்பலாம்.**

# உலகச் செய்திகள்



இத்தாலியில் உள்ள மௌன்ட் எட்னா எரிமலை பயங்கர தீப்பிழம்புகளுடன் வெடித்து சிதறியது. சிசிலி தீவில் அமைந்துள்ள இந்த எரிமலை 3 ஆயிரத்து 330 அடிஉயரம் கொண்டதாகும். இந்த எரிமலை வெடித்து சிதறியதை அடுத்து அப்பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்து காணப்பட்டது. மேலும், எரிமலையில் இருந்து வெளியேறிய தீப்பிழம்புகள் சாலைகளில் வெள்ளம்போல் பாய்ந்து ஓடியது. ஐரோப்பாவின் மிக உயர்ந்த எரிமலை இதுவாகும். இது ஆண்டுக்கு பலமுறை வெடித்து சிதறுகின்றன. கடைசியாக 1992 ஆம் ஆண்டு பயங்கரமாக வெடித்து சிதறியது.



அரிசி மற்றும் கோதுமையை விட சிறுதானியங்களில் அதிகளவு ஊட்டச்சத்து இருப்பதாக விஞ்ஞானப் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சிறுதானியங்களில் புரதம், நார்ச்சத்து, நியாசின், தயமின், ரிபோபிளவின் ஆகிய வைட்டமின்கள், இரும்புச்சத்து, மெக்னீசியம், கால்சியம், பொட்டாசியம் ஆகியவையும் அதிகளவு உள்ளன. மேலும் சிறுதானியங்களில் உள்ள பைட்டிக் அமிலம் எனப்படும் தாவர ஊட்டச்சத்து மனிதஉடலில் உள்ள கொழுப்பின் அளவை குறைப்பதனால் புற்றுநோயினை வெகுவாய் குறைக்கிறது.

100 கிராம் சிறுதானியங்களில் அதிகபட்சமாக 12.5 கிராம் புரதச்சத்து உள்ளது. ஆனால் அரிசியில் 7.9 கிராம் மட்டுமே உள்ளது. இதே போன்று அரிசியுடன் ஒப்பிடும் போது சிறுதானியங்களில் நார்ச்சத்து 13.6 கிராம். இரும்புச்சத்து 18.6 மி.கிராம், கால்சியம் 350 மி.கிராம் உள்ளன.

சிறுதானியங்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் நுண்கிருமிகளின் வளர்ச்சியை தடுக்கின்றன. பெருங்குடலின் செயல்பாட்டினை சீராக்குகிறது. உடல் நலத்திற்கு ஏதுவான கிருமிகளின் வளர்ச்சியை தூண்டுகிறது. சுறுசுறுப்பிற்கு காரணமான செராட்டினின் உற்பத்திக்கு உதவுகிறது. சிறுதானியங்களில் அதிகளவில் காணப்படும் மெக்னீசியம், தீவிர ஆஸ்துமா மற்றும் ஒற்றை தலைவலியை தடுக்கிறது. ரத்த அழுத்ததை சிறுதானியங்கள் சீராக்குவதால் இதய நோய் களிலிருந்து பாதுகாப்பளிக்கின்றன.

சிறுதானியங்களில் உள்ளநியாசின் (வைட்டமின் பி3) ரத்தத்தில் அதிகளவு கொழுப்பு சேர்வதை குறைக்கிறது. அன்றாடம் சிறுதானியங்களை பயன்படுத்துவோர்க்கு இரண்டாம் வகை (அதாவது இன்சுலின் சார்ந்த) சர்க்கரைநோய் வருவதில்லை. அதிகம் சிறுதானியங்களை பயன்படுத்தும் போது ரத்தத்தின் சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவுகிறது.



கல்லூரி மற்றும் பள்ளி வளாகத்தில் பறவை கணக்கெடுப்பு நிகழ்வு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. மதுரையின் பல்வேறு கல்லூரிகளில் கடந்த 4 நாட்களாக நடந்த இந்த பறவை கணக்கெடுப்பில் அரிய வகை பறவைகள் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. "ஜிபிபிசி 2020" என்ற இந்நிகழ்வின்படி நாடுமு ழுவதும் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்ட போதும், மதுரையில் வெகு உற்சாகமாக மாணவர்கள், ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

அமெரிக்கன் கல்லூரிவளாகத்தில் நடந்த கணக்கெடுப்பில் 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, 20 பறவை சிற்றினங்களை கண்டு பிடித்தனர். பழுப்பு, பிடிப்பான், புள்ளி ஆந்தை, வல்லூறு, செம்மார்பு குக்குறுப்பான், இரட்டைவால் குருவி, ஏழு சகோதரிகள் (தவிட்டுகுருவி), மரங்கொத்தி, பனை உழவாரன் போன்ற இனங்கள் கண்டறியப்பட்டது.



**கடந்த 16.01.2020 அன்று திருச்சியில் நடைபெற்ற உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்திலும், 15.01.2020ல் நாகர்கோவிலும் மற்றும் 22.02.2020 திருநெல்வேலியிலும் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத கூட்டத்தில் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் பிரார்த்தனையினால் கர்த்தர் செய்த அற்புதங்களில் ஒரு சில உங்கள் பார்வைக்கு...**

**வாசியுங்கள்! விசுவாசியுங்கள்! நீங்களும் அற்புதத்தை பெறுவீர்கள்**

## தடை நீங்கி எனது காரியத்தை வாய்க்கச் செய்த தேவன்!



எனது சொத்துக்குரிய பட்டா மற்றும் வாரிசு சான்றிதழ் கிடைக்காமல் மிகவும் மனக்கவலையில் இருந்தேன். பல்வேறு காரணங்கள் கூறி என்னை அதிக அலைச்சலுக்கு உள்ளாக்கினார்கள். எனவே, இது விஷயமாக அன்பரின் ஊழிய 24 மணி நேர ஜெப மையத்தை தொடர்புகொண்டு ஜெபித்துக் கொண்டேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு அற்புதமாக எனக்கு பட்டாவும், வாரிசு சான்றிதழும் உடனடியாக கிடைக்கும்படி அற்புதம் செய்தார். அதுமாத்திரமல்ல, எனது சொத்து விற்பனை செய்வதற்கு முன்பணமும் கொடுக்கும்படி தேவன் அதிசயம் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக

- Sis. சியாமளா, நாகர்கோவில்

## திருமண காரியத்தை வாய்க்கச் செய்த தேவன்



எனது மகளின் திருமண காரியத்தில் தடை இருந்தது. தடை நீங்கவும், ஆசீர்வாதமாக திருமண காரியம் நடக்கவும், கடந்த முறை நாகர்கோவிலில் நடந்த கூட்டத்தில் ஜெப விண்ணப்பம் எழுதி தந்துவிட்டு சென்றேன். எனது விண்ணப்பத்திற்காக ஜெபித்த ஜெபத்தினை கர்த்தர் கேட்டு எனது மகள் திருமண காரியத்திலிருந்த தடை நீங்கி மிகுந்த ஆசீர்வாதத்துடன் 20.01.2020 அன்று திருமணம் நடந்து முடிந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- Mrs. பாப்பா, கருங்கல்

## 20 வருட கால் வேதனை நீங்கியது



நான் 20 வருடமாக நடக்க முடியாமல் மிகவும் கஷ்டப் பட்டேன். சமீபத்தில் கீழே விழுந்ததில் இன்னும் அதிக வலி ஏற்பட்டது. இந்நிலையில் எனக்கு சுகமானால் அன்பரின் ஊழியம் நடத்தும் குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் சாட்சி சொல்வதாக பொருத்தனை செய்தேன். எனது பொருத்தனையை அங்கீகரித்த சர்வவல்ல தேவன் ஜெப வேளையில் எனக்கு அற்புத சுகத்தை தந்தார். இப்பொழுது வலியில்லை, நன்றாக நடக்கவும் முடிகிறது.

- திருமதி. ரஞ்சிதம், களக்காடு

## வலி, வேதனையிலிருந்து சுகம் தந்த தேவன்



நான் இடுப்பு வலி, தலை வலியினால் கஷ்டப்பட்டு வந்தேன். இதனால் இரவில் எனக்கு தூக்கம் வராது. மாத்திரைகள் சாப்பிட்டும் குணமாகவில்லை. இந்நிலையில் கடந்த முறை திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு எனது சுகத்திற்காக Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களிடம் ஜெபித்து சென்றேன். கர்த்தர் எனக்கிருந்த இடுப்பு வலி, தலை வலியிலிருந்து அற்புத சுகத்தை தந்தார்.

தூக்கமும் இப்பொழுது நன்றாக வருகிறது. அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றேன்.

- Sis. புஷ்பம், ஆரைக்குளம்

## இரண்டத்தனையான ஆசீர்வாதம் அருளின அற்புதர்



எனது பிள்ளைகள் இருவருக்கும் திருமண வயதாகியும் ஏற்ற வரன் கிடைக்காமல் திருமணம் நடைபெறாமல் தடையாக இருந்தது. பிள்ளைகளை நினைத்து பெற்றோர் ஆகிய நாங்கள் மிகவும் கவலையடைந்தோம். இந்நிலையில் திருநெல் வேலியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டு Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களிடம் பிள்ளைகளின் திருமண காரியத்திற்காக ஜெபித்துக் கொண்டேன். பாஸ்டர் அவர்கள் கர்த்தர் "இரட்டத்தனையான ஆசீர்வாதங்களினால் உங்களை மகிழ்ச்சியாக்குவார்" என்று கூறி ஜெபித்தார்கள். ஜெபத்தை கேட்ட அன்பின் தேவன் எனது பிள்ளைகள் இருவருக்கும் ஏற்ற வரனை தந்து திருமண காரியம் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திரு. ராஜன்பாபு, திருநெல்வேலி

## தேவ வல்லமையால் சுகம் பெற்றேன்



நான் நீண்ட நாட்களாக கை வலியினாலும், கழுத்து எலும்பில் ஏற்பட்ட தேய்மானத்தினால் அதிக பாதிப்பிற்குள்ளாகி கஷ்டப்பட்டு வந்தேன். வீட்டு வேலைகைள் அதிகமாக செய்வதால் அடிக்கடி வலியினால் துடிப்பேன். இந்நிலையில் உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்தில் கலந்துகொண்டேன். Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களின் ஜெப வேளையில் தேவ வல்லமை என் மீது இறங்கியது. அந்த நேரமே எனக்கிருந்த கை வலி, கழுத்துப் பகுதி வேதனை முற்றிலும் சுகமானது. சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

- Sis. எஸ்தர், திருச்சி

## என் பிரச்சனையை சொல்லி சுகம் கொடுத்த தேவன்



கடந்த மூன்று மாதமாக நான் மூட்டு வலியினால் மிகவும் வேதனையடைந்து வந்தேன். உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்தில் ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் "மூட்டு வலியோடு ஒருவர் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள், கர்த்தர் உங்களை சுகமாக்குகிறார்" என்று கூறிய அந்த நேரமே என்மேல் ஒரு வல்லமை இறங்கினது. உடனே எனக்கிருந்த மூட்டு வலி என்னை விட்டு விலகினது. இரண்டு கால்களையும் நன்றாக மடக்க முடிகிறது. பரிபூரணமாக சுகமடைந்தேன். சுகம் தந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- Sis. அமலாதேவி, திருச்சி

## தேர்வில் வெற்றியை அருளின வெற்றி வேந்தர் இயேசு



நான் அரசு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றுகின்றேன். 11 மற்றும் 12ஆம் வகுப்பில் படிக்கும் எனது மாணவர்களின் தேர்வு வெற்றிக்காக ஜெபிக்கும்படி ஒவ்வொரு முறையும் நாகர்கோவிலில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெப விண்ணப்பம் எழுதித் தருவேன். எனது மாணவர்களுக்காக Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் அவர்கள் குடும்பத்தினர் ஏறெடுக்கும் ஜெபத்தினை கர்த்தர் கேட்டு மாணவர்கள் அனைவரும் எனது பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற கர்த்தர் கிருபை செய்துள்ளார். கர்த்தருக்கே துதி, கனம், மகிமை!

- Sis. பேபி சரோஜா, நாகர்கோவில்

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

# குடும்ப ஆசீர்வாத ஜெபம்

**நாகர்கோவில்**

நாள் : மார்ச் 20 (சனிக்கிழமை)
இடம் : விஜயதா திருமண மண்டபம்
WCC ரோடு, நாகர்கோவில்
காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

**தூத்துக்குடி**

நாள் : மார்ச் 21 (ஞாயிற்றுக்கிழமை)
இடம் : ராஜ் மண்டபம்
பழைய பேருந்து நிலையம் அருகில், தூத்துக்குடி
மாலை 5.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை



தேவ செய்தி

## Dr. ஆனந்த ஸ்திரா


குறிப்பு : அன்பரின் ஊழிய பங்காளர்களை தனித்தனியாக சந்தித்து விசேஷித்த பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு : (0431) 2765386 & 94888 45627



## புத்தம் புதிய டான்ஸ் ஆல்பம்

நடன நிகழ்ச்சிகள் அனைத்தும்
தொகுத்து வழங்கப்படுகிறது
நமது யூட்யூப், வலைதளங்களில்
கண்டுமகிழுங்கள்




Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

# ANBARIN OOZHIYAM

மலர்:7 இதழ்:3 மார்ச் 2021 தனிப்பிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL:7 ISSUE NO:3 March 2021 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-





கர்த்தர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி,
என்னை விடுவித்தார்
**சங்கீதம் 54:7**